பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 23 வியாழக்கிழமை (06.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 101

# கிழக்குத் தேர்தலைப் புறக்கணிக்க தமிழரிடம் கூட்டமைப்பு கோரிக்கை

## நாடாளுமன்றில் மாவை உரை

கொழும்பு, மார்ச் 06



**"கிழக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடாததைப் பயன்படுத்தி, அத்தேர்தலில் வெற்றிபெறலாம் என்ற நப்பாசையில் அரசுத் தரப்பும் அதன் ஆதரவு ஒட்டுக்குழுக்களும் களமிறங்கியிருக்கின்றன. இந்த ஆயுதக் குழுக்களின் மிரட்டலுக்கு அடிபணியாது அத் தேர்தலை தமிழ் மக்கள் முற்றாகப் புறக்கணிக்க வேண்டும்." - இப்படித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றில் வேண்டுகோள் விடுத்தது.**

காலம் மாறி - தமிழர்களுக்கு நல்லகாலம் பிறக்கும்வரை - தமிழ் மக்கள் தமது கொள்கையை விட்டுவிடாது - அரசின் மிரட்டலுக்கு அடிபணியாது - பொறுமையாக மனத் தைரியத்துடன் இருக்கவேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களைக் கேட்டுக்கொண்டிருக்கின்றது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற - அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான - விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மாவை சேனாதிராஜா எம்.பி. இந்த வேண்டுகோளை அங்கு விடுத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த பிரமுகர்களுள் ஒருவரும் தமிழரசுக் கட்சியின் செயலாளருமான மாவை சேனாதிராஜா அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியவை வருமாறு:-

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு ஒன்றை வழங்குவதற்கான கட்டாயத்தை - வாய்ப்பை - இல்லாதொழிக்கவே இந்த அவ

(12ஆம் பக்கம் பார்க்க)

## கஞ்சிகுடிச்சாறில் கிளைமோர்த் தாக்கு

கிளிநொச்சி, மார்ச் 06

அம்பாறை கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் இருந்து கோட்டைகட்டிய விகாரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த விசேட அதிரடிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச்சட்டம் மேலும் ஒரு மாதம் நீடிக்கப்பட்டது

கொழும்பு, மார்ச் 06

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றில் 88 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்திய இராணுவத் தளபதிகள் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை குறித்து ஆராய்வு

புதுடில்லி, மார்ச் 06

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து இலங்கை - இந்திய இராணுவத் தளபதிகள் நேற்று முன்தினம் கூடி விரிவாக ஆராய்ந்திருக்கின்றனர்.

இந்தியாவிற்கு ஒருவார கால விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கை இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கும் அந்த நாட்டின் இராணுவத் தளபதி ஜெனரல் தீபக் கபூரிற்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியிருக்கின்றது.

இந்தச் சந்திப்புப் பற்றிய முழுமையான விவரங்கள் வெளியிடப்படாத போதிலும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான சமீபத்திய இராணுவ நடவடிக்கைகள் குறித்து இந்திய இராணுவத் தளபதி முழுமையாகக் கேட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளம் இலவங்குளம் படை நிலை மீது கிரனேட் லோஞ்சர் மூலம் தாக்குதல்

கொழும்பு, மார்ச் 06

புத்தளத்துக்கு வடக்கே கடற்கரைப் பிரதேசத்தை அண்டியிருக்கும் இலவங்குளம் இராணுவ நிலை மீது நேற்று முன்தினம் இரவு 40 எம்.எம். கிரனேட் லோஞ்சர்கள் மூலம் நான்கு குண்டுகள் ஏவித் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

வில்பத்து தேசிய வனப் பூங்கா பிரதேசத்துக்குள் பதுங்கியிருந்து அதன் தென்புறமாக முன்னேறிய விடுதலைப் புலிகளே இந்த இராணுவ நிலை மீது தாக்குதல் நடத்தினர் என்று கருதப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து நேற்றுக் காலை அப்பிரதேசத்தில் படையினர் சல்லடைபோட்டுத் தேடுதல் நடத்தினர் என்றும் -

அங்கு புலிகள் பொருத்தி வைத்திருந்த பொறிவெடியில் தேடுதல் நடத்திய சிப்பாய்களில் ஒருவர், காலை 8.45 மணியளவில் சிக்கிக் காயமடைந்தார் என்றும் - படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

காயமுற்ற சிப்பாய் புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## 2 தமிழ் இளைஞர்கள் அ' புரத்தில் கைது

கொழும்பு, மார்ச் 06

அநுராதபுரம் ரயில் நிலையத்தில் நேற்று அதிகாலை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட சோதனையின்போது சந்தேகத்தின் பேரில் தமிழ் இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்பது ஆரம்பக் கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்திருக்கிறது எனப் பொலிஸார் கூறினர்.

இருவரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## தனக்கு அடிபணியும் புலிகளை வளர்த்து விடுவதற்கே 13ஆவது திருத்த அமுலாக்கத்துக்கு இந்தியா அழுத்தம்

### நாடாளுமன்றில் ஜே.வி.பி. எம்.பி.

கொழும்பு, மார்ச்.06

தனக்கு அடிபணியும் புலிகளை வளர்த்து விடுவதற்கு 13 ஆவது திருத்தத்தை அமுலாக்குவதற்கு இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கிறது.

அவசர காலச்சட்ட நீடிப்பு தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் லால்காந்த மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

1987இல் இந்தியா இலங்கையை ஆக்கிரமித்தது. அப்போது ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் இந்தியாவிடம் மண்டியிட்டார்.

இந்த ஆக்கிரமிப்பைத் தொடர்ந்துதான் இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் காரணமாகவே வடமராட்சி நோக்கிய வெற்றிகர இராணுவ நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது.

இந்தியா அப்போது இலங்கையை ஆக்கிரமித்திருக்காவிட்டால் 1987 இலேயே புலிகளை இலங்கை இராணுவத்தினர் தோற்கடித்திருப்பர். அப்போதே யுத்தம் முடிவுக்கு வந்திருக்கும்.

இப்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவே இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் ராஜீவ் காந்தியின் பெரும் சூழ்ச்சியாகும். வரதராஜப் பெருமாள் போன்ற தனக்கு அடி

(12ஆம் பக்கம் பார்க்க)

## இன்று இரவு ஆலயங்களில் ஒலிபெருக்கி பயன்படுத்த பொலிஸ் அனுமதி பெறவேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 06

சிவராத்திரி தினமான இன்று இரவு குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் ஒலிபெருக்கி பயன்படுத்த பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளனர்.

யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாளி அபயசேகர இதனை தெரிவித்தார்.

ஆலய நிர்வாகிகள் தமக்கு அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் விண்ணப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா கொலைச் சம்பவத்தில் 6 படையினர் சந்தேகத்தில் கைது!

வுனியா, மார்ச் 06

வவுனியா, தவசிக்குளப் பகுதியில் ஐந்து இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஆறுபடையினர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கடந்த நவம்பர் மாதம் தவசிக்குளம் பகுதியில் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட ஐந்து இளைஞர்களின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட ஆறு படையினரும் நேற்று வவுனியா நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை இராணுவ சட்டத்தரணியின் வேண்டுகோளுக்கு இணங்க எதிர்வரும் ஏப்ரல் மாதம் மாதம் 4ஆம் திகதிவரை இராணுவப் பொலிஸ் பாதுகாப்பில் தடுத்து வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

கொல்லப்பட்ட ஐந்து இளைஞர்களில் ஒருவரின் உறவினர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய இந்த ஆறு இராணு

(12ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரிப் பகுதியில் நேற்றும் குண்டுவீச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 06

பூநகரிப் பகுதியில் நேற்று இரண்டாவது நாளாகவும் 'கிபிர்' விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் குடாநாட்டு வான் பரப்பு ஊடாகச் சென்ற விமானங்கள் அப்பகுதியில் குண்டுவீச்சை நடத்தின என்றும் -

சுமார் பத்துக் குண்டுகள் வீசப்பட்டதாகவும் பூநகரியை அண்மித்த பிரதேசங்களிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (அ-1-207)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஸ்கந்தாவின் இதய அஞ்சலி



எங்கள் கல்லூரி இசையாசிரியர்
திருமதி ஜெ.சந்தானலட்சுமி ஜெயபாலசிங்கம்
அவர்களின் அன்புக் கணவர்

**கதிரவேலு ஜெயபாலசிங்கம்**

அவர்களின் பிரிவு குறித்து எமது இதய அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
சுன்னாகம். (71699)

அதிபர், ஆசிரிய கழகம்.

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**இ.சிறீகாந்தன்**
(தொலைத்தொடர்பு பரிசோதகர்)



தோற்றம்
21 ★ 2★ 1953

மறைவு
6 ★ 3★ 2000

ஓம் சாயிராம்

சேவையின் திருப்தியை
உரை வைத்தாய்
நாராயணா கோவிந்தா
கோபாலா ஸ்ரீகிஷ்ணா

ச.ம.வி. ஒழுங்கை,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. (71754)

திருமதி சிவமலர் சிறிகாந்தன்
(மனைவி)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசேந்திரம்(அருமை) முத்துப்பிள்ளை



மூளாயைப் பிறப்பிடமாகவும் யாழ்.மடம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசேந்திரம்(அருமை) முத்துப்பிள்ளை நேற்று (05.03.2008) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரம் அருமையின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான ஆசைமுத்து செல்லியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியம்பிள்ளை- விக்ரோரியாவின் அன்பு மருமகளும், வேவி, ரஞ்சன், ராகினி, சகாயம், ராதா, குமார், பணம், குணம் ஆகியோரின் அன்புத் தாயாரும் மலர், விஜயகுமார், ரசினி, கலா, வெற்றி, சுசிலா, பூவா, மகேஸ்வரன், தயாளன், ரஞ்சி, ரொபின், கேமா, குயின், ராசன், பாபு, ரெஜினா, ரெஜினி, யோகன், பாலா, ராசாத்தி, சசி, சுலேஸ், விசு, திலீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மகேன், உதயா ஆகியோரின் பெரிய தாயாரும் சுப்பிரமணியம், காலஞ்சென்றவரான மணியம்மாவின் அன்புச் சகோதரியும் கமலம், காலஞ்சென்றவரான ஆரோக்கியநாதன், தங்கமணி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (06.03.2008) வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு இலக்கம், 432, ஸ்ரான்லி வீதியில் அமைந்திருக்கும் அன்னாரது இல்லத்திலிருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்கலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல: 432, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (B)

தகவல்:
குடும்பத்தினர்
வேவி,ரஞ்சன்,ராதா,குமார்.

## ஒத்திவைப்பு

உடுவில், தெல்லிப்பழை கோட்ட பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்களுக்கு இன்று இடம்பெறவிருந்த சதுரங்கப் போட்டி செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

**மகேசு பார்த்தீபனின்**
**கரையாத கற்பனைகள்**
**சிற்பக் கண்காட்சி**

இடம் :-
யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டதாரிப்பிரிவு
காலம் :-
06,07,08 ஆம் திகதி Mar 2008
நேரம் :-
9.00 - 4.30 மணி வரை

## தவறிவிட்டது

திருமதி இராமலிங்கம் இராஜேஸ்வரி என்பவருடைய தே.அ.அட்டை(447731266V), விசேட அ.அட்டை மற்றும் அலுவலர் அ.அட்டை என்பன IC கவருடன் 27.02. 2008 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் வடக்கு,சுன்னாகம்
தே.பே. இல 021 222 8727, 021 4591353.

## தேவை

பிரபல்யமான பாடசாலை ஒன்றின் பாவனைக்கேற்ற 10க்கு மேற்பட்ட இருக்கைகள் கொண்ட வான் கொள்வனவு செய்யப்பட உள்ளது. விற்பனைக்குள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

806,பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் சந்தியிலிருந்து (500 மீற்றர் தூரம்) உடுவில் வீதியில் 4 1/2 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **சோமசுந்தரம் இலகுநாதன்**
71,உடுவில் வீதி, மானிப்பாய்.
T.P. 021 222 2978

## தவறிவிட்டது

03.03.08 திங்கட்கிழமையன்று யாழ்.நகரப் பகுதியில் கையடக்கத் தொலைபேசி (Nokia 1600) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(சிம்காட்டினையாவது அனுப்பி வைக்கவும்)

முகவரி: எச்.என்.பி. அஸ்சூரன்ஸ்,
62-64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021222 6016

**மகளிர் தின விழா**

கரவெட்டி, மார்ச்6

வடமராட்சி 'அஞ்சலிஅகம்' நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினர்களாக பருத்தித்துறைப்பிரதேசசெயலர் இரா.வரதீஸ்வரன் தம்பதியரும், ஓய்வு பெற்ற மாகாணக் கல்விப்பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பியும்கலந்துகொள்வர்.


**SHAMROCK**
ஈச்சமோட்டை வீதி,
யாழ்.

A/L 2010,09,08 Day
B.St.-B.S.பசில்
Econ-N.B.கஜீதரன்
★ ACC-S.S.தவா
★-09-பங்குடமை
(திங்,வெள்.4 pm)
ENG-G.RANGIT
C/MA 08 Paper
Fri,Sat,sun 5-6.30 pm
சிங்களம்
(பேச, எழுத, வாசிக்க)
M.SOLOMAN
sat,sun 3.30 pm


## நீங்காத நினைவில் நிலைத்து நிற்பவர்கள்

16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி — முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கணபதிப்பிள்ளை பரமநாதன்**
(ஓய்வு பெற்ற மின் பாதையாளர்)

மண்ணகம் 17.07.1932 — விண்ணகம் 02.03.1992
(சிவராத்திரி திரியோதசி)

கண் விழித்த காலம் முதல்
கணப்பொழுதும் பிரியாது
மண் சிறக்கக் கல்வி தந்தீர்கள்
மகிழ்வுடனே அரவணைத்தீர்கள்
பொன் மொழிகள் பல மொழிந்தீர்கள்
பொறுப்புடனே நடக்கச் செய்தீர்கள்
அன்பான வாழ்வமைத்தீர்கள்



**சரஸ்வதி பரமநாதன்**
(சதுர்த்தசி)

மண்ணகம் 18.08.1940 — விண்ணகம் 16.02.2007

அமைதியுடன் சென்று விட்டீர்கள்
நினைவுகள் அடி நெஞ்சில்
நெருப்பாக எரிகிறது
மீள உங்கள் வரவுக்காய்
மனம் ஏங்கித் தவிக்கிறது
மீளாத் துயரிலே
நம் இதய அஞ்சலிகள்

32, புறாடி லேன்,
அரியாலை. (சி/551723)

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
ப.மோகனரூபன் (மகன்)


**WANTED EXTERNAL PHARMACIST**

CONTACT:-
ANANDA PHARMACY,
POINT PEDRO ROAD,
VALVETTITHURAI.
SALARY NEGOTIABLE.

தொடர்புகளுக்கு:
ஆனந்தா மருந்தகம்
பருத்தித்துறை வீதி
வல்வெட்டித்துறை
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் (71802)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி மாலா மகேந்திரன் அவர்களின் பாசமிகு தந்தை

**கதிரவேலு இரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையை தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
(A) யா/சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலை, நீர்வேலி.

## மரண அறிவித்தல்கள்

### குமாரவேலு சபாநாயகம்



தும்பளையை (பருத்தித்துறையை) பிறப்பிடமாகவும், புலோலி கிழக்கை வசிப்பிடமாகவும், தற்போது லண்டனில் (U.K) வசித்தவருமான குமாரவேலு சபாநாயகம் (01.03.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் அனுசியாதேவி, வட்சலாதேவி, தேவநாயகம், கலாவதி, சண்முகவடிவேல், மோகன், இரத்தினவேல், மகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தகப்பனும், சிவபாக்கியம் வீரகத்திப்பிள்ளை, ஜெயலட்ஷ்மி தங்கராசா, ராஜேஸ்வரி குமாரவேலு, கங்காதேவி ஆறுமுகம், பொன்னம்மா, சுகிர்தம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் சற்குணசிங்கம், விஜயகுமார், வாசுகி, பிரதாபன், ஞானேஸ்வரி, யோகிதா, யசோதரா, துகிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதாகர், உதயதர்சினி, வினோதன், உதயலஷ்மி, விஜயகணபதி, விஜயகாந்தன், விஜயஸ்கந்தன், சரவணன், அபிராமி, யசோதா, ஜானகி, தர்சிகன், துசாணி, சயினிகா, பிரியங்கா, அனந்திகா, பிரவீனா, அகல்யா, அக்ஷயா ஆகியோரின் அன்புப் பாட்டனும் அபிஷாவின் அன்புப் பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.03.2008) வியாழக்கிழமை 254 South Lane, New Malden Surrey U.K இல் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லண்டன்
தகவல்:
Contact No - 208 - 949 - 8135 (U.K) மனைவி, பிள்ளைகள். (சி/551717)

### திருமதி பொனிப்பாஸ் எலிசபெத்



சென்.ஜேம்ஸ், இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொனிப்பாஸ் எலிசபெத் நேற்று (05.03.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செபஸ்ரி பொனிப்பாஸின் அன்பு மனைவியும் மரிய மெலானி (இளவாலை), யோன் பிறிகாட் (இளவாலை), காலஞ்சென்ற ஆன் டெய்சி, ஜோச் அல்பிறட்(ஜேர்மனி), மரிய கொன்ஸ்ரீன் (ஜேர்மனி), யேசு ஜெகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், சூசைநாயகம் (ஓய்வூதியர்,தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை), மேரி ஸ்ரெலா, வின்சன் சேர்ச்சில் (சுவிஸ்), சுஜாதா (ஜேர்மனி), ராஜவஸ்தகர்(ஜேர்மனி), மேரி கிளமென்ரினா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சென் ஜேம்ஸ் லேன்,
இளவாலை.

அருட்திரு. S.J. இராசநாயகம்
(மைத்துனர்).


**யாழ்நகரில் முதன் முறையாக**
**Microsoft MCSE**
**Certified System Engineers**
**MCP MCTS MCSE MCSA**

மைக்ரோசொப்ற் பரீட்சை நிலையம்

- MCS நிறுவனம், உலகப்பிரசித்தி பெற்ற MICROSOFT நிறுவனத்தின் கணனி வலையமைப்பிற்கான (Computer Networking) Microsoft Certified System Engineer [MCSE] கற்கை நெறியை கடந்த 3 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடாத்திவருகின்றது.
- பரீட்சைகள் MICROSOFT நிறுவனத்தினால் MCS நிறுவனத்தில் நடாத்தப்பட்டு சான்றிதழ்களும், உறுதிப்படுத்தப்பட்ட அடையாள அட்டையும் MICROSOFT நிறுவன அதிபர் Bill Gates இனால் வழங்கப்படுகின்றது.
- பல்வேறு கட்டங்களாக தொடரக்கூடிய இக்கற்கை நெறியில் முதலாவது Module பூர்த்தி செய்ததும் Microsoft Certified Professional [MCP] சான்றிதழ் வழங்கப்படுகின்றது. மேலும் 6 Module பூர்த்தி செய்ததும் Microsoft Certified System Engineer [MCSE]சான்றிதழும் வழங்கப்படுகிறது.
- வெளிநாடுகளில் அதிக ஊதியத்துடன் வேலைவாய்ப்புக்களைக் கொண்டுள்ள Network Manager, System Administrator ஆகிய துறைகளுக்கு MCSE, MCSA தகுதி பெற்றோரே தெரிவு செய்யப்படுகின்றனர். மேலும் MCSE தகுதி பெற்றோருக்கு விசா நடைமுறைகளின் போது மேலதிக புள்ளிகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது
- வெளிநாடுகளில் 7 x (225+400))$US செலவாகும் மைக்ரோசொப்ற் பொறியியலாளர் கற்கை நெறியை இலங்கையில் மிகக்குறைந்த செலவில் கற்கும் சந்தர்ப்பம்.

மேலதிக விபரங்களிற்கு, நேரில்



**Mobile@net Computer Services (MCS),**
**324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**



யாழ்ப்பாணத்தில் கற்கை நெறிகளையும்,
பரீட்சைகளையும் நடாத்தும் தனித்துவமான நிறுவனம்

Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project


# இடம்பெயர்ந்து இயங்கிவருகின்ற போதிலும் மாணவர்களின் கல்வியில் கண்ணாக இருக்கும் மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை


பாடசாலையின் அதிபர் செபஸ்தியாம்பிள்ளை அன்ரன்

இடம்பெயர்ந்து வேறு இடத்தில் இந்தப் பாடசாலை இயங்குகின்றபோதிலும் அந்தச் சுற்றாடலில் உள்ள மாணவர்களும் இங்கு அதிக எண்ணிக்கையில் கல்வி கற்கிறார்கள்.

இதேபோன்று யாழ்ப்பாணம், இளவாலை போன்ற இடங்களில் உள்ள மாணவர்களும் இங்கு வந்து கற்கின்றார்கள். அனுமதி கேட்டு வரும் மாணவர்களுக்கு எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லாமல் அனுமதிகளை வழங்குகின்றது மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை.

கடந்த 18 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து இப்பாடசாலை இப்போது ஆனைக்கோட்டைச் சந்திக்கு அண்மையில் தனியார் வீடு ஒன்றில் சுறுசுறுப்பாக இயங்கி வருகின்றது. இடப்பற்றாக்குறை, நெருக்கடிகள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் கல்விப் பணியை இடைவிடாது முன்னெடுக்கின்



றது இந்தப் பாடசாலை.

பாடசாலையின் அதிபர் செபஸ்தியாம்பிள்ளை அன்ரன் பாடசாலை குறித்துத் தெரிவித்ததாவது:-

நான் பாடசாலையை 96ஆம் ஆண்டில் கையேற்கும் போது மானிப்பாய் சென். ஆன்ஸ் பாடசாலையுடன் சேர்ந்து இயங்கி வந்தது. அப்போது 5 மாணவர்கள் இப்பாடசாலையில் இருந்ததுடன் 5 ஆசிரியர்களும் காணப்பட்டார்கள். இடம்பெயர்வுக்கு முன்னர் இப்பாடசாலை அருட் சகோதரிகளின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கி வந்தது. அப்போது ஒரு பெண்கள் பாடசாலை போன்று மயிலிட்டியில் இயங்கி வந்தது.

தரம் 5 வரை ஆண்கள், பெண்கள் காணப்பட்டபோதிலும் தரம் 5 இற்கு மேல் பெண்களே கல்வி பயின்றார்கள்.

ஐந்து பிள்ளைகளுடன் பொறுப்பேற்கப்பட்ட இப்பாடசாலை பல இடங்களிலும் இயங்கி தற்போது ஆனைக்கோட்டை சந்திக்கு அண்மையில் தனியார் வீடு ஒன்றில் இயங்குகின்றது.

இன்று தரம் 1 முதல் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வரை வகுப்புக்களைக் கொண்டுள்ள இப்பாடசாலையில் தற்போது 120 பிள்ளைகள் கற்கின்றார்கள்.

கடந்தாண்டு வெளியான ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சைக்கு ஆறு மாணவர்கள் தோற்றி ஐந்து பேர் சித்தியடைந்து ஜி.சி.ஈ. உயர்தர வகுப்பில் அயல் பாடசாலைகளில் கற்று வருகின்றார்கள்.

ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சையில் கடந்தாண்டு வெளியான பெறுபேறுகளில் ஆறு பாடங்களில் நூறு வீதமான பெறுபேற்றை இப்பாடசாலை பெற்றுள்து. தற்போது பன்னிரண்டு ஆசிரியர்களுடன் இப்பாடசாலை இயங்கிக்கொண்டு இருக்கின்றது. பணிப்பாளரும் சண்டிலிப்பாய் மற்றும் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தினரும் உதவி களை வழங்கி வரு கின்றார்கள்.

டெனிஷ் அகதிகள் பேரவை, சிறுவர் பாதுகாப்பு நிதியம், யுனிசெவ், கியூடெக் ஆகிய நிறுவனங்கள் இப்போது எமக்குப் பல்வேறு உதவிகளை வழங்குகின்றார்கள். இதனைவிட பாடசாலை நலனில் இப்பகுதி கிராம அலுவலர், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோரும் அக்கறை காட்டுகின்றார்கள்.

பாடசாலைக்கு செல்லாத மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைப்பது முதல் பாடசாலைக்கு வேண்டிய தம்மாலான உதவிகளை இவர்கள் செய்து வருகின்றார்கள். தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட இப்பாடசாலை இடம்பெயர்ந்து தற்போது சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பிரதேசத்தில் இயங்கிக் கொண்டு இருக்கின்றது.

இப்பாடசாலையின் சுற்றாடலில் உள்ள பிள்ளைகளே கூடுதலாகக் கல்விகற்கிறார்கள்.

இங்கு கற்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றார்கள்.




இந்தப் பிள்ளைகள் ஆரம்ப வகுப்புக்களில் இணையும் போது சற்றுப் பின்தங்கியிருந்தாலும் பின்னர் ஆசிரியர்களின் அயராத முயற்சியினால் கல்வியில் மேலோங்குகின்றார்கள்.

இந்தப் பாடசாலையில் கற்கும் பிள்ளையின் தாய் ஒருவர் தெரிவிக்கையில் எங்கை படிச்சாலும் பிள்ளை படித்தால் சரி. பிள்ளைகள் வீட்டுக்கு அண்மையாகப் படிப்பதினால் நாங்களும் பிள்ளைகளைக் கூட்டி வந்து கூட்டிச்செல்லச் சுலபமாக உள்ளது. இங்கு கல்வி நடவடிக்கைகளும் சீராக இடம்பெறுகின்றன. பிள்ளைகளும் உற்சாகமாகக் கற்கின்றார்கள் - என்றார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இயங்குகின்றது. சுமார் நூற்றி இருபத்தைந்தாவது வருடத்தில் காலடி எடுத்து வைத்துள்ள இப்பாடசாலையில் பழைய மாணவர் சங்கம் இது வரை அமைக்கப்படவில்லை. கடந்த சில வருடங்களில் பாடசாலையில் கற்று வெளி

## பாடசாலைக்கு வசதிகளை ஏற்படுத்துவதில் அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவுகின்றன

யேறிய பழைய மாணவர்கள் பாடசாலையின் பல்வேறு நிகழ்வுகளுக்கும் உதவி செய்து வருகின்றார்கள்.

தனியார் வீட்டில் இயங்கும் பாடசாலையில் கூரைத் திருத்தம், புதிய கொட்டகைகள் அமைத்தல், மலசலகூட வசதி ஆகியவற்றை செய்வதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவிகளை வழங்கியுள்ளன.

பிள்ளைகளின் கற்றலுக்கு வழிகாட்டியாக நூலகம் ஒன்று அமைக்கப்பட்டு சிறந்த முறையில் இயங்கி வருகின்றது. வகுப்பறைகள் வசதிகள் குறையாக இருந்தாலும் கற்றல் நடவடிக்கைகள் ஒழுங்காக நடைபெறுகின்றன.

பாடசாலையில் விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள் உள்ளபோதும் அவற்றைப் பயன்படுத்துவதற்கு இடவசதி இல்லை.

வலய மட்ட கோட்ட மட்டத்தில் மாணவர்கள் தமிழ்த்தினப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெற்றுள்ளார்கள். ஆங்கில தினப் போட்டிகளிலும் வருடாந்தம் கலந்து கொண்டு வருகிறார்கள். இதே போன்று விளையாட்டுப் போட்டிகளிலும் குறிப்பாக மென்பந்து கிரிக்கெட் போட்டி, உதைபந்தாட்டம், தடகளப் போட்டிகள் என்பனவற்றிலும் கலந்து தமது ஆற்றல்கள் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

உடற்கல்வி ஆசிரியர்கள் இல்லாமை பெரும் குறையாகவே உள்ளது. இந்த மாணவர்களுக்கு கணனிக் கல்வி வசதிகளும் இல்லை. பாடசாலைக்குப் பெற்றோர்களின் பங்களிப்பு என்பது மிகவும் குறைவாகக் காணப்படுவதுடன் பிள்ளைகளைச் சீரான முறையில் பாடசாலைக்கு அனுப்பவேண்டும் என்பதிலும் அவர்கள் அவ்வளவு அக்கறை காட்டுவதில்லை.

மாணவர்களின் ஆற்றல்களை வளர்ப்பதில் ஆசிரியர்கள் இணைந்து செயற்படுகின்றார்கள்.

மாற்று வலுவுள்ள பிள்ளைகள் இங்கு நான்கு பேர் காணப்படுகின்றார்கள். இந்தப் பிள்ளைகள் தனிமைப்படுத்தப்படாது ஏனைய பிள்ளைகளைப் போல் உரிய அந்தஸ்தும் மதிப்பும் கொடுக்கப்பட்டு உடல், உள வளர்ச்சிக்கும் வேண்டிய செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றமை பாராட்டத்தக்கதாகும்.

**பவித்திரன்**

விளையாட்டு மைதானம் சற்றுத் தூரத்தில் உள்ளது. அதில் மாணவர்கள் விளையாட பாடசாலை சுற்றாடலில் உள்ளவர்கள் அனுமதித்துள்ளார்கள். இதேபோன்று பாடசாலையின் உலக உணவுத் திட்டம் நல்ல முறையில் பெற்றோர்களின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் களஞ்சிய அறை வசதி இல்லாமையால் அயல் வீட்டில் உள்ளவர் தனது வீட்டின் அறையை களஞ்சிய அறையாக பயன்படுத்த அனுமதித்து பாதுகாத்து வருகின்றார். இது, சுற்றாடல் இப்பாடசாலைக்கு வழங்கும் ஆதரவையே காட்டுகின்றது.

சமய நிகழ்வுகளான சரஸ்வதி பூசை, ஒளிவிழா, பாடசாலை பரிசளிப்பு விழா விளையாட்டுப் போட்டிகள் என எல்லா நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. சைவ பரிபாலன சபையினர் நடத்திய சமய அறிவுப் போட்டியிலும் பிள்ளைகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்கள்.

*

# காரைநகரில் கல்வி வளர்ச்சியில் முன்பள்ளி நிலையங்களின் பங்கு

காரைநகர் முன்பள்ளி கல்விச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை விஸ்தரிக்கச் செய்யும் நோக்குடன் காரைநகர் வாழ் கல்விமான்களும் நலன் விரும்பிகளும், மக்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகிறார்கள். யாழ்ப்பாணம் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இதில் ஒன்றுதான் காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவாகும். இது ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இங்கு ஆரம்ப காலங்களில் மக்கள் செறிவாக வாழ்ந்த போதிலும் அண்மைக் கால நாட்டின் போர்ச்சூழல் மக்களை புலம் பெயர வைத்துள்ளது. எனினும் கல்வி நடவடிக்கைகள் இயலுமான வரை நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கு பதிநான்கு முன்பள்ளிகள் இயங்குகின்றன. தொத்தம் 415 பிள்ளைகள் கற்கின்றார்கள். முன்பள்ளி நிலையங்களில் சத்துணவு 'சோ ஆ' என்னும் நிறுவனத்தின் உதவியுடன் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றது. அத்துடன் தென்னிந்திய திருச்சபையும் சத்துணவுத் திட்டத்தை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு மிகவும் உதவியாக விளங்குகிறது. முன்பள்ளி நிலையங்களுக்கு தளபாட வசதியும் மிகவும் முக்கியமானதொன்றாகும். இத்தகைய வசதிகள் இருக்கும்போதுதான் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பது இலகுவானதாக அமையும். அவ்வகையில் 'வேல்ட் விஷன்' தளபாட வசதிகளை முன்பள்ளிக்கு வழங்குகின்றது. அவைகளால் வழங்கப்படும் இத்தகைய வசதிகள் போதியதாக இல்லாமையினால் சில முன்பள்ளிகள் சிறப்பாக இயங்க முடியாமல் உள்ளது.

எதிர்கால சமுதாயத்தில் முன்னோக்கிய வளர்ச்சி முன்பள்ளிகளின் வளர்ச்சியோடு நெருங்கிய தொடர்பு கொண்டது. இதனால் இதற்கு பொறுப்பாக இருக்கின்ற ஆசிரியர்களுக்கு பயிற்சி மிக இன்றியமையாததாகும். இதனால் அது தொடர்பான பயிற்சிகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இத்தகைய பயிற்சிகளை வழங்குவதற்கு இப்பிரதேசத்தில் சில நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. சில ஆசிரியர்கள் அரசினால் வழங்கப்பட்ட பயிற்சிகளை பெற்று தம் கற்பித்தல் திறனை மேலோங்கச் செய்துள்ளனர்.

அடுத்து கல்வி நடவடிக்கை களுக்கு மிக அவசியமாக தேவைப்படுவது கற்பித்தல் உபகரணங்களாகும். ஒரு பிள்ளை காட்சியின் மூலம் கற்பது 87% ஆகும். கேட்பதன் மூலம் 7%மான அறிவையே பெற்றுக் கொள்கின்றது. இதனால் கற்பித்தல் உபகரணங்களை கொண்டு கற்பிக்கும் போது பிள்ளைகளுக்கு விளக்கம் இரட்டிப்பாகின்றது. இதனால் குழந்தை கல்வியின் இத்தகைய உபகரணங்கள் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக ரொகள்ளப்படுகின்றது. எனினும் இங்கு பல பாட



சாலைகளில் கற்பித்தல் உபகரணங்கள் இல்லாமை பெரும் குறைபாடாக உள்ளது. இதனை நிவர்த்தி செய்ய இத்தகைய நிறுவனங்கள் உதவி புரியவேண்டும் என்பது சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

பல முன்பள்ளி நிலையங்களில் மலசல கூடமோ, கிணறுகளோ இல்லை. இதனால் ஆசிரியர்களும், மாணவர்களும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர். குடி தண்ணீர் பிரச்சினையும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. ஆசியர்களுக்கான சம்பளம் குறைவாகவும் சில நிலையங்களில் மிக மிக குறைவாகவும் காணப்படுகின்றன. வேலையில் தம்மை அர்ப்பணித்து மன மகிழ்ச்சியுடன் ஆசிரியர் கற்பித்தலில் ஈடுபடவேண்டுமானால் அவர்களுக்கு வேதனமும் ஒரு குறிக்கப்பட்ட அளவில் இருத்தல் வேண்டும். ஆனால் இன்றைய நிலையில் அவர்கள் பெறும் மாத ஊதியம் ஒரு நாள் செலவிற்கு கூட போதாததாக உள்ளது. இத்தகைய நிலையில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பது கடினமாகவே உள்ளது.

முன்பள்ளி நிலையங்களை அமைக்கும் போது கட்டட வசதி மிகவும் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய தொன்றாகும். அனைத்து வசதிகளையும் கொண்டதாக கட்டடம் அமைந்திருக்க வேண்டும். காரியாலயம், களஞ்சிய அறை, செயற்பாட்டு அறை, மலசல கூடம், மைதானம், பூங்கா போன்றவைகள் முக்கியமான அம்சமாகும். நெருக்கமான இடங்களுக்கு மத்தியிலோ மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட இடத்திலோ அசுத்தக் காற்று பரவக் கூடிய வகையில் தொழிற்சாலைகள், மயானங்கள் உள்ள இடத்திலோ பேரூந்து நிலையங்களுக்கு அருகிலோ அமைதல் கூடாது. இத்தகைய வரையறைகளுக்கு மத்தியில் நிறுவப்பட வேண்டிய இப்பள்ளிகள் காரைநகரின் சில இடங்களைப் பொறுத்தவரை நிரந்தரமானதொரு கட்டடம் இல்லாமலே பல காலம் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

இத்தகைய பல குறைபாடுகளைக் கொண்டு இயங்கும் இத்தகைய முன்பள்ளி நிலையங்கள் தொடர்ந்தும் தம் கல்வித் தரத்தை பேணுவது போற்றுதலுக்குரிய விடயமாகும்.

கல்வியை மேலும் முன்நகர்த்தும் நோக்குடன் காரைநகர் வாழ் பொதுமக்கள் சிலர் பாடசாலை கல்வியிலும் அக்கறை கொண்டு மிகவும் வறுமையான பிள்ளைகளுக்கு 500 ரூபா வழங்கி வருகின்றார்கள்.

இன்று குழந்தைக் கல்வி தொடர்பான செயற்பாடுகளுக்கு எல்லா நாடுகளும் அதிகளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. இத்தகைய முன்பள்ளி கல்விச் செயற்பாடுகள் பல நோக்கங்களையும் அர்த்தங்களையும் உள்ளடக்கிய ஒரு கல்விச் செயன்முறையாகும்.

இக்கல்வியானது நான்கு முக்கியமான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது.

* குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல்.
* விரும்பத் தகுந்த மனோ பாவங்களை வளர்த்தல்.
* நல்ல நடத்தைகளையும் தேக ஆரோக்கியத்தையும் வளர்த்தல்.
* குழந்தைகளை அடுத்த நிலைக்கு தயார் செய்தல்.

முன்பள்ளிக் காலமானது பொதுவாக 3-5 வயது வரையுள்ள காலப்பகுதியை கொண்டதாகும். இக்காலம் விளையாட்டின் மூலம் பல அனுபவங்களையும் அறிவையும் பெற்றுக் கொள்ளும் காலம் ஆதலால் குழந்தைகள் இத்தகைய முன்பள்ளி நிலையங்களில் விளையாட்டின் மூலமே அறிவைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

கலாநிதி. திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

குழந்தைகளின் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த இத்தாலிய நாட்டைச் சேர்ந்த மரிய மொண்டிசரி அம்மையார் குழந்தை கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து 1937ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்து அவரது மொண்டிசொரி முறையைப் பரப்பியதன் விளைவு இலங்கையிலும் அதன் தாக்கம் ஏற்பட்டன. இவரது கோட்பாட்டின்படி குழந்தைகளுக்கு அளவிடற்கரிய ஆற்றல்கள் இருப்பதாகவும் இதனால் அவர்களை சரியான முறையில் வழிநடத்த வேண்டும் என்றார். இவருடைய கல்விநடைமுறைகளுக்கு புரோபல்(Frobel), பெஸ்டலொறி (Pestalozzi) என்பவர்களின் குழந்தை கல்விச் சிந்தனைகளும் செல்வாக்குப் பெற்றுள்ளன. இவ்வகையில் புலோபரினால் ஆரம்பிக் ,கப்பட்ட குழவிப் பூங்கா (Kinder Garden) முறை இன்று மிகவும் பிரசித்தி பெற்றதாக விளங்குகின்றது.

*

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி அகிலா சந்திரசேகரம்
அவர்களின் அன்புத் தந்தை

### கதிரவேலு இரத்தினம்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் (71697) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பா.அ.சங்கம்.

---

எமது அன்புத் தெய்வம்

## அமரர் மாணிக்கர் பரஞ்சோதி அவர்களின் ஓராண்டு நினைவலைகள்



06.03.2008
(மகா சிவராத்திரி தினம்)

ஆண்டொன்று போனதையா - உங்கள்
அன்பு முகம் எமைப் பிரிந்து - ஆனாலும்
உங்கள் நினைவலைகள் - என்றும்
எம்மை விட்டுப் பிரியாது
பிள்ளைகளின் நலனுக்காய்
அல்லும் பகலும் அயராது உழைத்து
உடன்பிறந்தோர்க்கு உதவிகள் பல புரிந்து
இல்லையென்னாது உறவினர்களுக்கு உதவி
இறை வழிபாட்டில் என்றுமே மூழ்கி
இவ்வுலகம் விட்டு விண்ணுலகம் சென்றீரையா!

உங்கள் நினைவில் என்றுமே கலங்கி நிற்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மாமி.

மாரியப்புலம்
தாவடி வடக்கு,
கொக்குவில்.

(சி/551715)

---

## மரண அறிவித்தல்கள்

### வைத்தீஸ்வரன் மகேஸ்வரன்



கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் பொலிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தீஸ்வரன் மகேஸ்வரன் 29.02.2008 வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் வைத்தீஸ்வரன் - பாலாமணி தம்பதியரின் அன்பு மகனும் சூரியகுமாரியின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன், கெங்கேஸ்வரன், அழகேஸ்வரி, பாஸ்கரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2008) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொட்டன சுட்டி, பொலிகண்டி,
வல்வெட்டித்துறை. (71696)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி மகேஸ்வரி துரையப்பா



இல. 11/1 (3), மணிக்கூட்டு ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி துரையப்பா அவர்கள் 04.03.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் பொன்னையாவின் அன்பு மகளும், குமாரசாமி (மலேசியா), சண்முகநாதன் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசிங்கம் (அளவெட்டி), ஞானேஸ்வரி, சிறிராணி (காந்தன் Computer System), சாந்தினி (லண்டன்) சிறிதரன்(காந்தன் Computer System) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜேந்திரன், கமலாதேவி, காலஞ்சென்ற சந்திரகாந்தன் மற்றும் சண்முகராஜா ஆகியோரின்அன்பு மாமியாரும் குமரேஸ், கஜேந்திரன், சுபாஜினி, ஹரிகரன், ஷண்கீரன், விபூஷன், ஐஸ்வர்யா, செந்தூர்குமரன், வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (05.03.2008) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் கோம்பையன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

331, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

---

### ஜென்ம தின நிகழ்வு

சுன்னாகம், சுழிபுரம் பிரதேசசத்சங்கங்கள் இணைந்துநாளை மு.ப. 10 மணிக்கு தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் ஸ்ரீ கல்கி பகவானின் ஜென்மதினநிகழ்வை நடத்தவுள்ளன.

## யாழ்.பல்கலையில் இன்று நூல் வெளியீடு

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல், சிறப்புக்கலை யைச் சேர்ந்த ந.மயூரன் எழுதிய 'பசிய டங்கா இருளிலி ருந்து ஒன்பது கதைகள்' என்னும் சிறுகதைத் தொகுப் பின் வெளியீட்டு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா கலந்து கொள்வார்.

(202)

## மரண அறிவித்தல்

### திருமதி விகாஸ் பாஸ்கலினா



யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ், பரிஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விகாஸ் பாஸ்கலினா 01.03.2008 அன்று காலமானார்.

அன்னார் செல்வநாயகம் - காலஞ்சென்ற செபமாலை தம்பதியரின் அன்புப் புதல்வியும் விகாஸின் அன்பு மனைவியும் அந்தோனெற், அனெற், அதுரியன் ஆகியோரின் அன்புத் தாயும் செல்லப்பிள்ளை, றீற்றா, விஜயன், மரியசீலி, அருமைநாயகம் ஆகியோரின் சகோதரியும் குலசிங்கம் - தவம் தம்பதியரின் மருமகளும் வீணா, சுகர்ணா, விகர்ணா, வினோத், விற்றோறஸ், நவிச்சந்திரா, பஞ்சநாயகம், ராஜன், வசந்தி, அன்னம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (06.03.2008) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் Cimetiere Demorsang Sur orge, Route du bois pommier, 91390 MORSANG SUR ORGE என்ற இடத்தில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

*தொடர்புகளுக்கு:*

| | | |
|---|---|---|
| Paris | விகாஸ் | 0033 169511896 |
| Paris | விகாஸ் | 0033 619030830 |
| Paris | வினோத் | 0033 619030825 |
| Paris | விற்றோறஸ் | 0033 619030826 |
| Italy | மத்தியூஸ் | 0039 0916711270 |
| Canada | பீற்றர் | 001 416 319 1006 |

(சி/551716)

### கூட்டம்

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமான மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில்நடைபெறும் இக்கூட்டத் திற்கு சமுகமளிக்கு மாறு நிறுவனத் தலைவர்களையும் அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகளையும் பணிப்பாளர் கேட்டுள்ளார். (202)

### மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்.6

புத்தூர், வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டிஇன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் கா.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிக்கு கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.சித்திரவடிவேல் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்

(1-160)

---

## கண்ணீர்க்காணிக்கை



திக்கம் நீர்வளை விக்னேஸ்வரப் பெருமானின் ஆதீனகர்த்தாவும் பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணிய தேவஸ்தான ஆதீனகர்த்தாவும் இளைப்பாறிய இசையாசிரியையுமாகிய

செல்வி
### யோகம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கந்தவனப் பெருமானை பிரார்த்தித்து எமது இதயபூர்வமான அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றேன்.

சிவப்பிரம்ம ஸ்ரீ ச.வைத்தியநாதக் குருக்கள் குடும்பத்தினர்
கந்தவனம், பொலிகண்டி.

---

## முதலாம் ஆண்டு நிவைஞ்சலி

தோற்றம் 10 ★ 04 ★ 1929



மறைவு 06 ★ 03 ★ 2007

திருமதி
### மனோன்மணி மயில்வாகனம்

தன்னலம் பாராது எம் நலம் பார்த்த அன்னையே!
உங்கள் பிரிவு ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது.

அன்னாரின் ஒருவருட நினைவையொட்டி இன்று(06.03.2008) வியாழக்கிழமை திருநெல்வேலி கிழக்கு வெள்ளைப் பிள்ளையார் கோயிலில் ஆத்மசாந்திப் பூசையும் அன்னதானமும் வழங்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்
ம.இரசநாயகம் (மகன் இ.மி.ச.)

திருநெல்வேலி கிழக்கு.

---

## மரண அறிவித்தல்



### கதிரவேலு இரத்தினம்(சிவபாதம்- மெக்கானிக்)

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் அச்செழுவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு இரத்தினம்(சிவபாதம்) 04.03.2008 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு தம்பதிகளின் புதல்வரும், பொன்னம்மாவின்(ஒய்வுபெற்ற ஆசிரியர்) அன்புக்கணவரும், வைரவநாதன், காலஞ்சென்ற பாலயோகேஸ்வரன் மற்றும் தேவதாசன், மலர்நாயகி ஆகியோரின் சகோதரரும், மாலா (ஆசிரியை, சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை), அகிலா( ஆசிரியை, கரந்தன் ராமுப்பிள்ளை வித்தி., நீர்வேலி), நித்திலா(சுவிஸ்), சிவானந்தராஜா (ஜேர் மனி), கிருபானந்தன்(சுவிஸ்), பவானந்தன்(லண்டன்), கசிகலா (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும் மகேந்திரன் (பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம், இ.மி.ச. ,யாழ்ப்பாணம்), சந்திரசேகரம் (அப்பன்), கருணாநிதி(சுவிஸ்), சற்குமாரி (ஜேர்மனி), அனுராதா(சுவிஸ்), கிரிஜா(லண்டன்), வசீதரன்(கணக்காளர், கொழும்பு)ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2008) வியாழக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அச்செழு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு , நீர்வேலி.
060 221 6648
4591410

(சி/551721)

தகவல்:
ஆ.மகேந்திரன்,
(இ.மி.ச. யாழ்ப்பாணம்),
சந்திரசேகரம்(அப்பன்)

## காலாவதியான மருந்து விற்பனை; உரிமையாளருக்கு அபராதம்

வலி.தென்மேற்கு,மார்ச்6

காலாவதியான மருந்து வகைகளை விற்பனை செய்த மருந்தக உரிமையாளருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் 12ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளது.

மல்லாகத்தில் உள்ள மருந்தகம் ஒன்றில் திகதி காலாவதியான மருந்துகளை விற்பனை செய்தமை திடீர் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த மருந்தக உரிமையாளருக்கு எதிராக யாழ். மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் ரி.மகாதேவன் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கை விசாரணை செய்த மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் சம்பந்தப்பட்ட நபருக்கு அபராதம் விதித்தார். (202-135)

## சிவராத்திரியை ஒட்டி நாளை கடைகளை மூடக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்6

சிவராத்திரி தினத்தையொட்டி நாளை வெள்ளிக்கிழமை வர்த்தக நிறுவனங்களைப்பூட்டி விடுமுறை வழங்குமாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் சகல வர்த்தகர்களையும் கேட்டுள்ளது.

வர்த்தக உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்க வசதியாக இந்த ஏற்பாட்டைச் செய்யுமாறு வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. (1)

### அச்சுவேலியில் இயங்கிவரும்

## இலங்கை வங்கியின் சுன்னாகம் விரிவாக்கல் கூறை பிரதேசக் கிளையாக்குமாறு வாடிக்கையாளர் கோரிக்கை

அச்சுவேலி,மார்ச்6

அச்சுவேலியில் கடந்த ஐந்து வருடங்களாகச் செயற்பட்டு வரும் சுன்னாகம் இலங்கை வங்கியின் விரிவாக்கல்கூறை இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளையாக நிரந்தரமாக்க வேண்டும் என்று வங்கியின் வாடிக்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அச்சுவேலியில் செயற்பட்டுவரும் இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளையின் விரிவாக்கல் கூறினை அச்சுவேலிக் கிளையாக நிரந்தரப்படுத்தி உறுதி செய்ய வேண்டும் என வங்கியின் வாடிக்கையாளர்கள் வங்கியின் தலைமைப்பீடத்துக்கு நீண்டநாள்களாக விடுத்துவரும் கோரிக்கையை அடுத்து வங்கியின் வடபிராந்திய உயர் அதிகாரிகளுக்கும் வாடிக்கையாளருக்குமான கலந்துரையாடல் கடந்த 28ஆம் திகதி அச்சுவேலியில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ப.சிவரட்ணம், வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையார் பி.ஏ.அருமைநாயகம், இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் பி.அரசகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த ஐந்து வருடங்களாக வங்கியின் செயற்பாடுகள் சுன்னாகம் கிளை கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட நிலையில் செயற்படுவதால் நடைமுறையில் வாடிக்கையாளர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக நடைமுறைக்கணக்கு வாடிக்கையாளர்களுக்கான காசோலைகள் சுன்னாகம் கிளை ஊடாக நடைமுறைப்படுத்தப்படுவதால் காசோலையை உரிய முறையில் பயன்படுத்தமுடியாமல் இருப்பதாகவும் காசோலையை ஏற்றுக்கொள்வதற்கு வர்த்தகர்கள் தயக்கம் காட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. நீண்டகாலமாகத் தாங்கள் அனுபவித்துவரும் நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு அச்சுவேலி வங்கிக் கிளை உடனடியாக நிரந்தரமானதாக மாற்றப்படவேண்டும் என வாடிக்கையாளர் கோரிக்கை விடுத்தனர்.

வங்கி உயர் அதிகாரிகள் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் வங்கியை அச்சுவேலிக் கிளை என நிரந்தரப்படுத்துவதற்கு ஆவன செய்வதாகத் தெரிவித்ததுடன், நிரந்தரக் கிளையாக மாற்றுவதற்கு மத்திய வங்கியின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு வங்கியின் நிதிக் கையாளுகை மேலும் 50 மில்லியன் ரூபாவால் அதிரிக்க வேண்டி இருப்பதால் வாடிக்கையாளர்கள் வங்கியுடன் கொடுக்கல் வாங்கல்களை மேலும் அதிகரிக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர். (202-11)

## அரச உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழிப் பரீட்சை

அரச கரும திணைக்களத்தின் அனுசரணையுடன் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலை, மானிப்பாய் பிரதேச சபை ஆகிய நிலையங்களில் நடத்தப்பட்ட அடிப்படைச் சிங்களப் பயிற்சிநெறியில் பங்குபற்றிய அரச உத்தியோகத்தர்களுக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகள் தமக்குரிய அனுமதி அட்டைகளை நாளை யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பிராந்திய ஆணையாளர் கேட்டுள்ளார்.

## வலி.தென்மேற்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதியுதவி

வலி.தென்மேற்கு,மார்ச்6

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் கடந்த டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தினால் பாதிக்கப்படடவர்களுக்கு வழங்குவதற்காக 7 லட்சத்து 51 ஆயிரத்து 891 ரூபாவை யாழ்.மாவட்ட அரசாங்க செயலகம் வழங்கியுள்ளது. இப்பிரிவில் வெள்ளத்தினால் கடும் பாதிப்புக்குள்ளானவர்கள் என்று கண்டறியப்பட்ட 95 குடும்பங்களுக்கு இந்த நிதி பங்கீடு செய்யப்பட்டு வழங்கப் படவிருப்பதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (202-135)

## உலக உணவுத்திட்ட மீளாய்வுக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்6

உலக உணவுத்திட்ட செயற்பாடுகள் தொடர்பான மாவட்ட மீளாய்வுக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இக் கூட்டத்தில் பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், பிரதேச சபை செயலாளர்கள், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், நகரசபை செயலாளர்கள், மாநகர சபை ஆணையாளர்கள், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர்கள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (1-95)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்த மாணவர்களுக்கான இலவசக் கணனிப் பயிற்சி வகுப்பு அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்டத்தின் த்கவல் தொழில்நுட்பப் பிரிவு மாவட்டத் தலைவர் லயன் எஸ்.கனகராசா கணனியை இயக்கி வகுப்பை ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம். பயிற்சியில் கலந்துகொண்ட மாணவர்களுடன் மாவட்டத் தலைவர், வலயத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஷ், கழகத் தலைவர் லயன் இ.ஜெயபாலன், செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம், பயிற்சி ஆசிரியர் மற்றும் கழக உறுப்பினர்களையும் இரண்டாவது படத்திலும் காணலாம். (207)

## பருத்தித்துறை கிழக்கில் மீனவர் தங்குமிடம்

பருத்தித்துறை,மார்ச்6

வடகிழக்கு மாகாண கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம் பருத்தித்துறை கிழக்கில் 10 லட்சம் ரூபா செலவில் மீனவர் தங்குமடம் ஒன்றை நிர்மாணித்து வருகின்றது.

ஆழிப்பேரலை மீள்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் இம் மீனவர் தங்குமட நிர்மாண வேலைகளை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்று மேற்கொண்டு வருகின்றது.

பூர்த்தியடையும் நிலையில் உள்ள இம்மீனவர் தங்குமடம் வெகுவிரைவில் திறந்துவைக்கப்பட்டு மீனவர்களிடம் கையளிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (202-218)

# யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து 58 டாக்டர்கள் இவ்வாண்டு வெளியேறினர்

யாழ்ப்பாணம்,மார்ச்6

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து இவ்வாண்டு 58 டாக்டர்கள் (M.B.B.S) வெளியேறியுள்ளனர்.

இறுதியாண்டுப் பரீட்சைகளின் முடிவுகள் அண்மையில் பல்கலைக்கழக நிர்வாகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

இம்முடிவுகளின் பிரகாரம் - செல்வி எஸ்.உமாரமணி விசேட திறமைச் சித்தியைச் சத்திர சிகிச்சையிலும் மகப்பேற்றியலிலும் பெற்றுள்ளார்.

இரண்டாம் வகுப்பு உயர்தரத்தில் எட்டுப் பேரும் இரண்டாம் வகுப்பு கீழ் தரத்தில் 28 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

முடிவுகள் வருமாறு:

**இரண்டாம் வகுப்பு உயர்தரச் சித்தி**

செல்வி எ.அனுராதா, செல்வி எ.கிறிஸ்ரா நிசாந்தினி, செல்வி ஜே.ஜெயபிரியா (விசேட சித்தி - குழந்தை மருத்துவம்), செல்வி ரி.ஜெயரூபா, செல்வி எ.நளாயினி, ரி.ரமணன் (விசேட சித்தி - குழந்தை மருத்துவம்), செல்வி சி.சிவானுயா (விசேட சித்தி - சத்திர சிகிச்சை), ஆர்.விமலராஜன்.

**இரண்டாம் வகுப்பு கீழ்தரச் சித்தி**

செல்வி எஸ்.அகலிகா, செல்வி ஆர்.அகிலா, செல்வி என்.பவானி, செல்வி பி.கீதாஞ்சலி, ரி.கௌரிபாலன், ஜெ.கஜேந்திரன், செல்வி எஸ்.கலாஜினி, கே.குமரன், எஸ்.மயூரன், எம்.மதுரகீதன், செல்வி ஆர்.எம்.மைத்திரி, செல்வி எம்.நளினா, எம்.நவநீதன், செல்வி சி.நிரோகரி, எஸ்.நிசாந்தன், செல்வி எஸ்.பஞ்சகல்யாணி, செல்வி எம்.ரஞ்சிததர்சினி, செல்வி சி.ரஞ்சினி, செல்வி எஸ்.சங்கீதா, பி.செந்தூரன், பி.சிவமயூரன், செல்வி எஸ்.சிவாதி, ஆர்.சிவசங்கர், செல்வி எம்.தமிழினி, செல்வி எஸ்.துஷ்யந்தி, கே.விக்கினேஸ்வரராஜா, எஸ்.விநோதன், செல்வி வி.கோபிகா.

**சாதாரண சித்தி**

செல்வி பி.அபர்ணா, ஜெ.கமிலஸ், பி.தேவகாந்தன், ஜே.ஆர்.யூட் றோகி பாஸ்கரன், செல்வி எஸ்.குகப்பிரிகை, செல்வி என்.நளாயினி, செல்வி கே.நிசாந்தி, செல்வி எம்.பிரிந்தினி, எஸ்.பிரசன்னா, செல்வி எஸ்.சகிதா, செல்வி ஆர்.சசிவதனி, ரி.சதீசன், எ.செந்தூரன், ரி.சிவபிரமயன், எம்.ஸ்ரீபன், வை.தினேஸ்காந், செல்வி எஸ்.விஜிதா, கே.விநோதாஸ், செல்வி எஸ்.யசோதா, செல்வி எஸ்.சங்கீதா, செல்வி பி.துவாரகா. (1-86)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,மார்ச்6

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்று வரும் ஆண் களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள கால் இறுதி ஆட்டத்தில் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகமும் இணுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (202-86)

★ ★ ★

வலி.வடக்கு,மார்ச்6

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் உடுவில் வைகறை விளையாட்டுக் கழகம் விலகல் முறையில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட் டத்தில் சுன்னாகம் நியூ உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (202-86)

★ ★ ★

வலி.வடக்கு,மார்ச்6

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இப்போட்டியில் ஏழு விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொண்டு விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-86)

## ஆனைக்கோட்டைப் பிரதேச வயல் நிலங்களுக்கு பெட்டியுடன் உழவு இயந்திரங்கள் செல்லத்தடை

நவாலி,மார்ச்6

ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள விவசாய காணிகளுக்குள் அனுமதியின்றி உழவு இயந்திரங்கள் அதன் பெட்டியுடன் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இங்குள்ள விவசாய நிலங்களில் எவருடைய அனுமதியுமின்றி மண் அகழப்பட்டு உழவு இயந்திரங்களில் ஏற்றிச் சென்று விற்பனை செய்யப்படுவதை அவதானிப்பதாகவும்- இதனால் நிலம் பள்ளமாகி வெள்ளம் நிற்பதுடன் அயல் காணிகளும் பாதிக்கப்படுவதாகவும் - ஆனைக்கோட்டை கிராமசேவையாளர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர், விவசாய சம்மேளனத்தினர் ஆகியோரிடம் பலர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இப்பகுதி வயல் நிலங்களுக்குள் எந்தவோர் உழவு இயந்திரமும் பெட்டிகளை இணைத்துக்கொண்டு செல்லக்கூடாதென்று ஆனைக்கோட்டை உயரப்புலம் விவசாய சம்மேளனம் அறிவித்துள்ளது. (202-100)

# ஆள்கடத்தல், படுகொலை சம்பவங்களின் விசாரணைப் பொறுப்பு பொலிஸாரிடமே

## சுயாதீன ஆணைக்குழுத் தலைவர் கருத்து

கொழும்பு, மார்ச் 6

காணாமற்போதல், ஆள்கடத்தல், படுகொலை ஆகிய சம்பவங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது என்று காணாமற்போதல், ஆள்கடத்தல், மனிதப்படுகொலை தொடர்பான நடவடிக்கை சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர் மகாநாம திலகரட்ண தெரிவித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

சிலர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யாமல் அது தொடர்பான ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்து வருகின்றார்கள். இது சிக்கலை ஏற்படுத்தக்கூடியது.

சில விதிமுறைகளுக்கு அமைவாகவே ஆணைக்குழுவும் மனித உரிமைகள் அமைப்பும் இச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளும்.

2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 3ஆம் திகதி தொடக்கம் இதுவரை 7 ஆயிரத்து 130 பேர் காணமல் போயுள்ளனர். இவர்களில் கடத்தப்பட்டவர்களும் அடங்கும்.

இவர்களில் 6 ஆயிரத்து 633 பேர் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன.

இந்த விசாரணைகள் பற்றிய அறிக்கைகள் அடுத்த மூன்று மாத காலப்பகுதிக்குள் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (சி)

# கப்பலில் இருந்து மீட்கப்பட்டோரை சொந்த நாடுகளுக்கு அனுப்ப ஏற்பாடு

கொழும்பு, மார்ச்6

முல்லைத்தீவு கடற்பகுதி யில் இருந்து தொலைவில் வைத்து படகு ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட 71 பங்களாதேஷ் மற்றும் மியன்மார் பிரஜைகளை சொந்த நாடுகளுக்கு அனுப்புவதற்காக அந்த நாடு களின் தூதரகங்களிடம் அவர் களைக் கையளிக்க வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என அறிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டரீதியான செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் அந்த நாடுகளின் தூதரகங்களில் அவர்கள் கையளிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக் கப்பட்டது.

இதேவேளை, முல்லைத்தீவுக் கடலில் மீட்கப்பட்ட கப்பல் நேற்று முன்தினம் திருகோணமலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட பின்னர் 71 பேரும் திருகோணமலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளனர்.

இவர்களுக்குத் திருகோணமல்லத் துறைமுகத்தில் உணவு மற்றும் மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டுவருகின்றன என்று கடற்படையினர் தெரிவித்திருக்கின்றனர். (சி)

## மின்சாரக் கட்டண உயர்வு:

# வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்க

### நாடாளுமன்றில் நேற்று முன்தினம் கோரிக்கை

மின் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பாக அரசால் வெளியிடப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலை உடன் ரத்துச்செய்யுமாறு ஜே.வி.பி. நேற்று முன்தினம் நாடாளுமன்றில் அரசிற்கு வேண்டுகோள் விடுத்தது.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மின்கட்டண உயர்வு தொடர்பான - சபை ஒத்திவைப்பு வேளை - பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றி... ஜே.வி.பியைச் சேர்ந்த எம்.பியான பியசிறி விஜயநாயக்க இவ்வேண்டுகோ... 

அவர் அங்கு கூறியவை வருமாறு:-

மின் கட்டணத்தை அதிரிக்க அரசு நடவடிக்கை எடுத்துவரு...ின்றது.

விலைவாசி உயர்வால் மக்கள் இப்போதே தாங்கமுடி...த சுமையைச் சுமந்து கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் மின் கட்டண்ம் அதிகரிக்கப்பட்டால், மரத்திலிருந்து விழுந்தவனை மாடு ஏறி மிதித்த நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவர்.

இலங்கை மின்சார சபைக்கு திறைசேரி வழங்கிவந்த மானியம் நிறுத்தப்பட்டமையாலேயே மின் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று சொல்லப்படுகிறது. அது பொய். இலங்கை மின்சார சபையில் இடம்பெறுகின்ற பாரிய ஊழல் மோசடியே மின் கட்டணத்தை அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்படக்காரணம்.

இந்த மோசடிகளை நிறுத்த நடவடிக்கை எடுக்காது அந்த மோசடிகளால் ஏற்படும் நஷ்டத்தை மக்களின் தலைகளில் கட்டவே அரசு முயற்சி எடுத்திருக்கின்றது. அந்த வகையிலேயே மின் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. மின் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் அரசால் வர்த்தமானி அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. அரசு இந்த வர்த்தமானி அறிவித்தலை உடன் ரத்துச்செய்யவேண்டும் - என்றார்.

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, மார்ச் 6

வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரன் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி றது.

எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

காலைத் திருவிழா முற்பகல் 10 மணிக் கும் மாலைத்திருவிழா பிற்பகல் 6.30 மணிக்கும் நடைபெறும். (202-160)

யாழ்ப்பாணம், மார்ச் 6

அகில இலங்கைத் திருமுறை மன்றம் சிவராத்திரி விழாவை முன்னிட்டு நடத் தும் பன்னிரு திருமுறைப் பாராயணம் ஓதுதல் இவ்வாண்டும் பல ஆலயங்களில் நடத்தப் படவுள்ளன.

இன்று காலை 9 மணிக்கு கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலயத்தில் பாராயணம் ஓதுதல் ஆரம்பமாகிப் பல ஆலயங்களில் நடைபெற வுள்ளது.

* * *

வடமராட்சி, மார்ச் 6

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை செல்வச்சந்நிதி கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கலாபூஷணம் வ.செல்லத்துரையின் இன்னிசைக் கச்சேரி நடைபெறும். (202-160)


**இதோ!**

**சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!**

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228
(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/54169)



சிவமயம்





வித்தியாலய ஸ்தாபகர்
க.வே.சரவணமுத்து (ஆசைப்பிள்ளை)
சுவாமிகள் அவர்களின்

**திருவுருவச்சிலை திறப்பு விழா**

இடம் : யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்
காலம்: இன்று (06.03.2008) வியாழக்கிழமை மு.ப. 9 மணி
தலைவர்: திரு.ச.வாமதேவன் (அதிபர், யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்)
பிரதம விருந்தினர்கள்: திரு.த.கந்தசாமி (ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)
திருமதி தவஅருட்கரசி கந்தசாமி குடும்பத்தினர்
சிறப்பு விருந்தினர்: திரு.வை.குணசேகரம் (கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்)
கௌரவ விருந்தினர்: சிவத்திரு. வ.குமாரசாமி ஐயர்

**நிகழ்வுகள்**

* மங்கல வாத்திய இசையுடன் ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்திலிருந்து காலை 9 மணிக்கு சுவாமிகளின் திருவுருவப் படம் பாடசாலைக்கு எடுத்து வருதல்
* மங்கல வாத்தியம் இசைத்தல்
* மங்கள விளக்கேற்றுதல்
* இறை வணக்கம்
* கௌரவ பெயர்ப்பலகை திரைநீக்கம் - திரு. வை.குணசேகரம் (கோட்டக்கல்வி பணிப்பாளர், நல்லூர்)
* திருவுருவச் சிலை திறந்து வைத்தல்
* ஆசியுரை - சிவத்திரு. சி.கதிர்காமநாதக் குருக்கள் (ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய பிரதமகுரு)
* வரவேற்புரை - ம.பௌசிகா (உபதலைவர், பழைய மாணவர் சங்கம்)
* தலைமையுரை - திரு.ச.வாமதேவன் (அதிபர், யா/கோ.இ.கி.ம.வி.)
* சிற்பி இணுவையூர் சிற்பவேந்தன் க.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (Dip. in Art) அவர்களை கௌரவித்தல்
* சிறப்பு விருந்தினர் உரை
* பிரதம விருந்தினர் உரை
* கௌரவ விருந்தினர் உரை
* வாழ்த்துரைகள்:
திரு.சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)
திரு.பா.தனபாலன் (உப பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)
திரு.க.தேவராஜா (வணிகத்துறை பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.இரா.செல்வவடிவேல் (சைவபரிபாலனசபை, கௌரவ பரீட்சைச் செயலாளர்)
திரு.ச.தெட்சணாமூர்த்தி (தலைவர்,ஸ்ரீஅற்புத நர்த்தன விநாயகர் சனசமூகநிலையமும்,குமரன் விளையாட்டுக் கழகமும்)
திரு.சு.இலங்கநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி, ஆலோசகர் பழைய மாணவர் சங்கம்)
* நன்றியுரை : செயலாளர், பழைய மாணவர் சங்கம்

இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்பு...ன் அழைக்கின்றோம்.

இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
06.03.2008

பழைய மாணவர் சங்கம்,
பழைய மாணவர்சங்க கனடா கிளை,
பழைய மாணவர்சங்க லண்டன் கிளை,

[71620]



**ஐந்தாவது பிறந்தநாள் வாழ்த்து**

கோண்டாவில் தில்லையம்பதியை சேர்ந்த குகேந்திரன் சுகிதா
தம்பதிகளின் செல்வப் புதல்வி சுவேதா தனது 5வது
பிறந்த நாளை இன்று (06.03.2008) வியாழக்கிழமை தனது
இல்லத்தில் கொண்டாடுகிறார். செல்வி சுவேதாவை
அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா,
கோண்டாவில் வசிக்கும் குகன் பெரியப்பா,
ராஜிபெரியம்மா, கிரேஸியா,அக்கா, கிலன் தம்பி,
லண்டனில் வசிக்கும் குகதாசன் சித்தப்பா,
நேமினாசித்தி ஆவரங்காலில் வசிக்கும் அம்மப்பா,
அம்மம்மா,தயாபரன் மாமா கார்த்தீபன் மாமா,
பிரகாஸ் மாமா, தாரகை அன்ரி, மற்றும்
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்
அனைவரும் சுவேதாவை கோண்டாவில்
தில்லையம்பதியாளின் அருள் பெற்று
பல்லாண்டு காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றார்கள்.





செல்வி சுவேதா

06.03.2008

தில்லையம்பதி கோண்டாவில்

திரு.திருமதி குகேந்திரன் தம்பதிகள்



**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் நாகப்பர்
இராதாகிருஷ்ணன்
(சுங்கத் திணைக்கள அத்தியட்சகர்)

வையகம்
20.07.1958

வானகம்
26.02.2006

இரண்டாண்டு போனதுவே!
இல்லாமல் நீங்கள் போய்
இனிய எம் வழிகாட்டி
இல்லாமல் ஏங்குகின்றோம்
இனி எமக்கு சிவராத்திரி
இறையான உமக்கன்றோ.

புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

உறவுகள்.

# சிவராத்திரி விரத அனுட்டானம் பிறவிப் பயனை அடைவதற்கு இந்துக்கள் செய்யும் தவம்

உள் ஒளி பரப்பி உவப்பிலா ஆனந்தப் பரவசத்தை ஆன்மாக்களுக்கு அருளுபவன் இறைவன். இந்து சமயத்தவர்கள் கடவுளை சிவன் என்று அழைப்பர். இறைவன் தனது ஒளிமயமான திருப்பெரு வடிவத்தைக் காட்டி பிரமா, விஷ்ணு முதலான முக்கோடி தேவர்களையும் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் ஆட்கொண்ட நாள் சிவன்ராத்திரி என்பர்.

''ஓசை ஒளியெல்லாம் நீயே ஆனாய்'' என்று சைவ சித்தாந்தம் கூறும். இறைவன் ஒளிவடிவானவன் என்பது இந்து சமயத் தத்துவம்.

''வார்த்தையானவர் மாமிசமானார்'' என்று விவிலியம் கூறும். தேவ வழிகாட்டுதலை ''தேவ ஒளி'' என்று கிறிஸ்தவர்கள் குறிப்பிடுவர்.

மோசேசுக்கு சீனாய் மலையில் இறைவன் ஒளிவடிவாக முள்ளிச் செடியில் காட்சி கொடுத்தது மட்டுமன்றி வேத வாக்கியங்களான பத்துக் கட்டளைகளையும் அருளினார் என்று யூத மதம் கூறும்.

இறைவன் திருவண்ணாமலையில் பிரமா, விஸ்ணு முதலான தேவர்களுக்கு ஒளி வடிவாகிக் காட்சி தந்தான் என்பது இந்து மத நம்பிக்கை.

சிவராத்திரி லிங்கவழிபாட்டை அடிப்படையாக கொண்டதாகும். மாசிமாதத்தின் பதினான்காம் நாளான- சூரியனும் சந்திரனும் ஒன்று கூடும் அமாவாசை நாள் சிவனுக்குரிய ராத்திரியாகும்.

ஜீவாத்மாவான சந்திரன் பரமாத்மாவான சூரியனுடன் ஒன்று கூடும் நாள் இன்றைய தினமாகும். சந்திரனுக்கு ஒளி இல்லை. ஒளியை எங்கிருந்து சந்திரன் பெற்றுக் கொண்டானோ அதே மூலத்தைச் சென்றடையும் நாளாகக் கருதப்படுகிறது இது.

பரமாத்மாவான சிவனுடன் அவனிடமிருந்து தோன்றிய பிரதிபிம்பங்களை நிகர்த்த ஜீவாத்மாக்கள் இரண்டறக் கலப்பதுபோல் சந்திரபகவானும் சூரிய தேவனுடன் இரண்டறக் கலப்பதாக அமைகிறது. இதுதான் தலைக்கூடல் எனப்படும்.

### சிந்துநதிவெளியில் தோன்றிய நாகரிகம்

லிங்க வழிபாடு நீண்ட வரலாற்றை கொண்டது. சிந்துநதித் தீரத்தில் வேதகால நாகரிகம் 5000 ஆம்ஆண்டுகளுக்கு முன் நிலை பெற்றிருந்தது.



அந்த நதிப் பள்ளத்தாக்கிலும் கங்கை நதியின் பகுதிகளையும் உள்ளடக்கிய பிரதேசத்தில் பன்நெடுங் காலம் நிலைத்திருந்த ஆய்வுகள் கூறுகின்றன.

மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற புதையுண்ட நகரங்களில் மேற்கொண்ட ஆய்வுகள் அங்கு லிங்கப்படிமங்களை மட்டுமன்றி லிங்கோற்பவரின் இலட்சினைகளையும் அகழ்ந்தெடுக்கக் காரணமாயின என்று கூறப்படுகின்றது.

இறைவனின் அருவுருவத்திரு மேனியே சிவலிங்கமாகும். ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கேற்ப அருவம், உருவம், அருவுருவம் ஆகிய திருமேனியைப் பெருங் கருணைக்கடலான சிவன் உபகரித்துள்ளான். ஆன்மாக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக.

### சிவலிங்க வழிபாடும் மின்காந்த சக்தியும்

சிவலிங்கமானது பிரபஞ்ச வடிவத்தில் அமைக்கப்பட்டுள் ளது. அது பிரபஞ்ச ஆற் றலை விட விஞ்சிய ஆற்றலைக் கொண்டுள்ளது. பிரார்த்தனையும் வழிபாடும் சிவ லிங்கத்தில் மின்காந்த ஓட்டங்களை ஏற்படுத்துவதாகக் கண்டறிந்துள்ளனர்.

ஆத்மலிங்கம், சோதிலிங்கம், சதாசிவ லிங்கம், சொர்க்கலிங்கம், சோபிதலிங்கம், சுயம்புலிங்கம், நடராசலிங்கம் எனப்பல லிங்கவடிவங்கள் வழிபாட்டுக்குரியனவாக கொள்ளப்படுகின்றன.

மத்துவர், போதாயனர், ஆதிசங்கரர் போன்ற மகான்கள் லிங்க வழிபாடு செய்ததாக அறிந்து கொள்ள முடிகிறது. சதாசிவ லிங்கத்தை பிரமா, விஸ்ணு மட்டுமன்றி அனைத்துத் தேவர்களும் வழிபட்டதாக சமய ஆதாரங்களிலும் புராணக்கதைகளும் தெரிவிக்கின்றன.

அழிவில்லாததும் எல்லையற்ற வல்லமையுடையதும் பரிசுத்தமானதுமான சிவலிங்கத்தின் உறைவிடம் பக்தர்களின் இதய சிம்மாசனமாகும்.

''உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது'' என்பார் சுவாமி விபுலானந்தர்.

இந்தப் புனிதமான நாளில் மனம், வாக்கு, காயம் ஆகிய திருகரணங்களும் புலன்வழிப் போகாது விரதமிருந்து வழிபாடு இயற்றுதல் அவசியம்.

இன்றைய தினத்தில் இந்துக்கள் வாழுமிடந்தோறும் இருக்கும் சிவாலயங்களில் விழித்திருக்கும் பக்தர்கள் முழுநாளும் உபவாசமிருந்து பிரார்த்தனையில் ஈடுபடுபவர். அது இருளில் இருந்து வெளிச்சத்திற்கு வருவதற்கானதாகும். இருளானது கர்மவினைப்பயனையும் ஒளி இறைவனையும் குறிக்கும்.

நான்கு சாமமும் சிவபூசை நடைபெறும். அபிஷேகம், அர்ச்சனை முக்கியமானதாகும். அபிஷேகத்திற்கு முதல் சாமத்தில் பால், தயிர், நெய் என்பனவும்-

இரண்டாம் சாமபூசைக்கு பஞ்சாமிர்தமும் மூன்றாவது பூசைக்குத் தேனும் நான்காவது சாமப் பூசைக்குப் புனித நீரும் கொண்டு அபிஷேகம் செய்யப்படும்.

அர்ச்சனை ஒவ்வொரு பூசையிலும் நடைபெறும். தாமரை, துளசி, வில்வம், நந்தியாவட்டையும் முறையே நிவேதிக்கப் படும்.

இறுதியில் லிங்கோற்பவருக்கு அபிஷேகமும் பூசை வழிபாடும் நடைபெறும். இந்த வழிபாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படும்.

சிவராத்திரி விரதம் அனுஷ்டித்து அபிஷேகம், அர்ச்சனை ஆகிய பூசைகளில் கலந்து கொள்பவர்கள்பிறவிப் பயனை அடைவர் என்பது இந்து மதநம்பிக்கையாகும்.

**கை.பேரின்பநாயகம்**

# அமைதி, தூய்மை, செழிப்பைக் கொண்ட புதிய சகாப்தம் ஒன்று பிறப்பதையே சிவராத்திரி குறித்து நிற்கிறது

உலகின் இருண்டகாலப் பகுதியாகிய பிரம்மாவின் இரவு அல்லது கலியுகப் பகுதியில் (தற்காலத்து இருண்ட யுகம்) பரமாத்மா உலகில் அவதரிப்பதையே மங்களகரமான பண்டிகையான சிவராத்திரி குறித்து நிற்கின்றது. ''உலகில் அநியாயமும் அதர்மமும் தாண்டவம் ஆடும் பொழுது நான் மீண்டும் தர்மத்தை ஸ்தாபிப்பதற்கு அவதரிப்பேன்'' என பகவத்கீதையில் குறிப்பிடப்பட்ட வாசகத்தை மெய்யாக்கும் முகமாக அவரது அவதாரமானது அமைகிறது.

தந்தையாகிய இறைவனின் ஆன்மீகப் பிறப்பானது இச்சீரழிந்த விவகாரம் கொண்ட உலகில் ஒரு புதிய அமைதி, தூய்மை மற்றும் செழிப்பைக் கொண்ட ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கும். அதுவே பிரம்மாவின் பகல், அல்லது பூமியில் சுவர்க்கம் எனப்படும்.

சிவன் என்பது கடவுளின் புராணப் பெயர் ஆகும். அவரே சர்வசக்திவான், சர்வ வல்லமை உடையவர். சிவன் எனில் உயந்தவர், உபகாரி, கருணை நிறைந்தவர், அனைத்து ஆத்மாக்களின் நன்மைக்காகவே அனைத்தையும் செய்பவர் என்றே பொருள்படும். மற்றும் ஆன்மீக சக்தி, ஒளியின் ஆதியான ''விதை''யும் சிவன் என்றே கூறப்படுகிறது. சிவபெருமானை அவர்கள் பல்வேறுபட்ட நீள்கோள வடிவங்களில் காட்டி இருக்கிறார்கள்.

சிவபெருமான் கடந்த காலத்திலும் தற்காலத்திலும் அசரீரியாக ஜோதி வடிவமாகியஜோதி லிங்கமாக வழிபடப்படுகிறார். அவர் ஒரு பிரகாசிக்கின்ற ஒளியாகவும் வழிபடப்படுகின்றார். அவர் முடிவற்றவரோ அல்லது சர்வவியாபகரோ அல்ல. அதாவது, அவர் கேத்திர கணித கணீப்பீடுகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டவர். சிவ புராண நூலானது கடவுள் சிவனை மிக நுண்ணிய பொருளைவிடத் துல்லியமானவர் என வர்ணிக்கிறது.

சிவபொருமான் தனது சக்தியிலும், ஞானத்திலும் முடிவற்று இருப்பதைப் போல் அவரது பெயரும் குணங்களும் முடிவற்றவையாகும். சிவபுராணத்திலே அவருக்கு ஆயிரத்துக்கு மேலான பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் சிவபொருமானின் சுபாவமா னது கடலின் சுபாவத்தைப் போல் இருப் பதனால் அவரே ஞானக்கடல், அமைதிக் கடல், அன்புக் கடல், சந்தோஷக்கடல், பேரின்பக்கடல், சக்தி மற்றும் துய்மைக் கடலாக இருக்கின்றார். இவையே பெரும் பாலும் இவரது பிரதானமான 7 குணங்களாகக் கருதப்படுகின்றன.

விழித்திருப்பதே சிவராத்திரியின் முக்கிய அம்சமாகும். இதுவே ஜகாரன் என அறியப்பட்டுள்ளது. உண்மையில் நாம் நமது மூன்றாம் கண்ணாகிய ஞானத்தின் விழிப்புணர்விலேயே சதா இருக்கவேண்டும். எதிர்மறையான குணங்கள் (காமம், பேராசை, கோபம், பற்று மற்றும் அகங்காரம்) திருடன் வடிவில் நம்முள்ளே இருக்கின்றன. இவை நமது உள்ளக அமைதியையும், சந்தோஷத்தையும் பறித்து விடுகின்றன. சிவபொருமான் காரிருளில் இங்கு அவதாரம் எடுக்கும் பொழுது அவர் புத்தியின் கூட்டைத் திறக்கிறார். அவர் மூன்றாம் கண்ணாகி ஞானத்தை அருளுகின்றார். இம் மூன்றாம் கண்ணை அல்லது சிவனை நெற்றிக்கண்ணைத் திறந்து வைத்துக்கொள்வதன் மூலம் நாம் நமது வாழ்க்கையில் ஞானோதயத்தை அனுபவிக்கலாம். இதன் ஞாபகார்த்தமாகவே மக்கள் பௌதீகமாக இரவு பூராவும் விழித்திருப்பார்கள். எவ்வகையான மலரையும் சிவபெருமானுக்கு அர்ப்பணிப்பது என்பது சிவன் அனைத்து ஆத்மாக்களையும் அவர்கள் எப்படி இருப்பினும் தனது குழந்தைகளாக ஏற்றுக்கொள்கிறார் என்பதையே காட்டுகிறது. இதனலேயே எருக்கலம் பூவைப் போன்ற கெட்ட துர்நாற்றம் வீசும் நச்சு மலரும் கூட அர்ச்சிக்கப்படுகிறது.

சிவராத்திரி சிவஜயந்தி எனவும் அழைக்கப்டுகிறது. இப் பெயர்கள் ஒன்றாகச் சேர்ந்து சர்வ சக்திவான் பரமாத்மா சிவனின் பிறப்பினையும் ஆண்டு நிறைவையும் நினைவு படுத்துகின்றன.

**பிரம்ம குமாரிகள் நிலையம்**

## உங்களை நீங்களே புரிந்து கொள்ளுங்கள்

இன்றைய திகதியில் உலகின் மக்கள் தொகை 550 கோடி. ஆனால் அனைவரிடமும் உள்ள நான் என்ற தத்துவம் மட்டும் ஒன்றே. ஒவ்வொருவரும் ஆணானாலும் பெண்ணானாலும் தன்னை நான் என்றே அழைத்துக் கொள்கின்றனர். இந்த 550 கோடி மக்களை எப்படி தெரிந்து கொள்வது? ஒருமுறை இந்த நான் தத்துவத்தை புரிந்து கொண்டால் நீங்கள் அனைவரையும் புரிந்து கொண்டவர்கள் ஆவீர்கள். இங்கு நிறைய பல்புக்கள் ஒளிர்வதைக் காணலாம். ஒரே மின்சாரம் தான் அனைத்திலும் பாய்கின்றது. அதைப்போலவே நான் தத்துவம் எல்லோரிடமும் ஒன்றுதான்.

நீங்கள் யார் எனக் கேட்பதை விட்டுவிட்டு இனிமேல் ''நான் யார்'' எனக்கேட்டுக் கொள்ளுங்கள். முதலில் உங்களைத் தெரிந்து கொள்ளுங்கள் .பிறகு அனைவரையும் உங்களால் தெரிந்து கொள்ள முடியும்.

இந்த உலகில் சச்சரவுகளுக்கும் போராட்டங்களுக்கும் காரணம் என்ன? அனைவரிடமும் இருக்கும் ஒருமைத் தன்மையைப் புரிந்து கொள்ள இயலாது தான் முக்கியமான காரணம்.

இந்த ஒருமைத் தன்மை புரிந்து கொள்ளப்பட்டால் அமைதியும் பாதுகாப்பும் அங்கே நிச்சயம் உயர்ந்த நிலையில் விளங்கும். அதைப்போலவே கடவுளும் பக்தனும் வேறு வேறானவர்கள் அல்ல. யார் வழிபாடு செய்கிறாரோ, யார் வழிபடப்படுகிறாரோ இருவருமே ஒன்றுதான். கடவுளை வழிபாடு செய்யும் பக்தன் தன்னையே ஆராதித்துக் கொள்கின்றான்.

ஏஹாத்மா சர்வபூத அந்தராத்மா. (ஒரே ஆத்மாதான் (தெய்வீகம்தான்) அனைவருள்ளும் உறைக்கிறது). இந்த ஒருமைத் தன்மைதான் பிரமன். இந்த ஒருமையைப் பலவாறாகக் காண்பது வெறும் பிரமை. (மயக்கம்) இந்தப் பிரமைதான் உலகில் இருக்கும் அனைத்துப் பதட்டங்களுக்கும் காரணம். உண்மையான ஆன்மீக சாதனை என்பது இந்த ஒருமைத்தன்மையை வளர்த்துக் கொள்வதுதான்.



அத்வைத் தர்சனம் ஞானம் (ஒருமைத் தன்மையை அனுபவிப்பது தான் ஞானம்) ஒன்றுதான் இருக்கிறது. அதற்கு இரண்டாவது வேறில்லை. அத்துடன் ஒன்று என்ற எண்ணைச் சேர்க்க அதன் மதிப்புக் கூடுகிறது.

**சாயி சிந்தனை**

## குடாநாட்டில் இன்று ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம், மார்ச்6

இந்துக்களால் அனுஷ்டிக்கப்படும் மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை குடாநாட்டில் ஊரடங்கு முழுமையாகத் தளர்த்தப்பட்டிருக்கும் என பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையக ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இன்று இரவு பக்தர்கள் ஆலயங்களுக்குச் சென்று சமய வழிபாட்டில் ஈடுபடுவதற்கு வசதியாக ஊரடங்கு தளர்த்தப்பட்டுள் ளதாகவும் - இன்று மட்டுமே இந்த நடை முறை இருக்கும் என்றும்- ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது.

(202)

## இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம் பாடசாலைகள் துடுப்பாட்டச்சங்கள், யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் 13 வயதுப் பிரிவினருக்கு இடையே இடம்பெற்றுவரும் 2007 ஆம் ஆண்டுக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை 9 மணிக்கு யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதுகின்றன.

(50-86)

# சிவராத்திரி விழாக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 6

ஊரெழு, சக்திபுரம் சிவபூரணி முத் தமிழ் மன்ற அறநெறிப்பாடசாலை நடத்தும் சிவராத்திரி விழா இன்று இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

மன்ற அதிபர் ந.து.ஜெயதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (202)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 6

சங்கவன் கல்விச்சோலை நடத்தும் சிவராத்திரி விழா இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு செம்பித் தோட்ட ஞானவைரவர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுயாதீன மனித உரிமை கள் பணிப்பாளர் சிதம்பரமோகன் கலந்து கொள்வார். (202)

★ ★ ★

கொக்குவில், மார்ச் 6

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினர் நடத்தும் மகாசிவராத்திரி விழா இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச் 6

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 54 ஆவது ஆண்டு விழாவும் சிவாராத்திரி விழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா. வன்னியசிங்கம் கலந்துகொள்வார். (202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்6

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய திருநெறிய தமிழ் மன்றக் கழகம் நடத்தும் சிவராத்திரி விழா இன்று மாலை 6 மணிக்கு ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் ப.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் ஓய்வுபெற்ற அதிபர் ச.சோதிப்பெருமாள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (202)

★ ★ ★

நல்லூர், மார்ச்6

நெடுந்தீவு கிழக்கு ஆலமாவைப் பிள்ளையார் கோயில் சிவராத்திரி விழா விசேட பூசைகள், சிறப்பு நிகழ்வுகளுடன் இடம்பெறவுள்ளது. (202-111)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச்6

சுன்னாகம், மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி ஆலய சிவராத்திரி விழா இன்று இரவு நான்கு சாம விசேட அபிஷேகம், பூசைகளுடன் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் தலவிருட்சமாகிய வில்வ மரத்துக்கு கீழ் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு பக்தர்கள் தமது கரங்களால் அபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிகழ்வுகள் யாழ்.எவ்.எம்.வானொலி மூலம் நேரடி அஞ்சல் செய்யப்படும்.(202)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச்6

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தீவகப் பிரதேசத்தில் நடத்தும் சிவராத்திரி விழாவும் சமய தீட்சை நிகழ்வும் இன்று புங்குடுதீவு சிவன் ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (202)

★ ★ ★

நல்லூர், மார்ச்6

மகாசிவராத்திரியை முன்னிட்டு கொக்குவில் ஏகத்துவ நிலையத்தின் ஆதரவில் அம்மா பகவானுக்கான கலசபூசை இன்று முற்பகல் 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை ஸ்ரீ அம்மா பகவான் ஜென்ம தினத்தை முன்னிட்டு பெருமாள் கோயில் திருமண மண்டபத்தில் பி.ப. 2.45 மணி முதல் பி.ப.6 மணி வரை பிரார்த்தனைகள் இடம்பெறவுள்ளதாகவும் கொக்குவில் ஏகத்துவ நிலையம் தெரிவித்தது. (202-111)

★ ★ ★

வலி.தென்மேற்கு, மார்ச்6

சித்தன்கேணி ஸ்ரீசிதம்பரேஸ்வரர் (சிவன்) ஆலயத்தில் சிவராத்திரி விழா இன்று நடைபெறவுள்ளது.

இரவு திருமுறை ஓதல், கூட்டுப்பிரார்த்தனை, பண்ணிசை, இன்னிசை போன்ற நிகழ்வுகளும் நான்கு ஜாமப் பூசை வழிபாடுகளும் நடைபெறவுள்ளன. (135)

★ ★ ★

பெரியவிளான் வடசேரி விக்கினேஸ்வரர் ஆலயத்தில் இன்று 6ஆம் திகதி வியாழக்கிழமை இரவு சிவராத்திரி விழா அனுட்டிக்கப்படவுள்ளது.

நான்கு ஜாமப் பூசை மற்றும் வழி பாடுகள் இடம்பெறவுள்ளன. (135)

# தீமைக்கு நன்மையே முற்றுப்புள்ளி

''தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக உங்களை வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்'' (மத் 5:39) என்ற இயேசுவின் வார்த்தைகள் எமக்கு முரண்பாடானதாகவும், நடைமுறைக்குச் சாத்தியமற்றதாகவும் தோன்றுகின்றது. ஆனால், தீமையை நாம் எதிர்க்கின்றபோது பெரும்பாலும் அதை வன்முறை மூலமே அடக்க முற்படுகின்றோம். அதுதான் எமக்கு இலகுவானதாகவும், சாத்தியமானதாகவும் இருக்கின்றது. அப்படிச் செய்கின்ற பொழுது நாம் தீமையைச் செய்பவரையும் எதிர்ப்பதைத் தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. இச்செயல் எம்மையும் வன்முறையாளராக உருவாக்குவது மட்டுமல்லாமல், தீமையை மென்மேலும் அதிகரித்து ஒரு வன்முறைச் சங்கிலித் தொடரை உருவாக்குகின்றது.




ஆதலால்தான் இயேசு தீமைக்கு நன்மையால் முற்றுப்புள்ளி வைக்க முயலுகின்றார். ''எவராவது உங்களை ஒரு கல்தொலை வரக் கட்டாயப்படுத்தினால் அவரோடு இருகல் தொலை செல்லுங்கள்'' (மத் 5:41) என்று இயேசு கூறுகின்றபோது அங்கு ஒரு தீமைதான் நடைபெறுகின்றது. அதேவேளையில் தீமை செய்பவருக்கு நன்மை செய்கின்ற பொழுது நன்மைக்கு எதிராகத் தீமையை விளைவிக்க தீமைசெய்பவரால் முடியாது. இறுதியில் நன்மையே வெல்லும். இதை நாமும் எமது நிதர்சன வாழ்க்கையில் செய்து வருகின்றோம். கணவன் கோபமாகப் பேசுகின்றபோது மனைவி அன்பாக இருந்து அவருக்கான சில உதவிகளைச் செய்து கொடுப்பதில்லையா? இந்நிலையில் தீமை முற்றுப்பெறுவதில்லையா? இது விஸ்திரப்படுத்தப்பட வேண்டும்.

இயேசுவின் பாடுகளும், மரணமும் அவரது போதனையினதும், வாழ்க்கையினதும், வாழ்வினதும் உச்ச வெளிப்பாடாக இருக்கின்றது. யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுப்பான் (லூக் 22:21) என அறிந்திருந்தும் அவர் தடுக்கவில்லை. தான் கொலை செய்யப்படப் போகின்றேன் எனத் தெரிந்திருந்தும் தப்பி ஓடவில்லை. இயேசு எல்லாக் கொடூரங்களையும் எதிர்ப்பதோடல்லாமல் பொறுத்துக் கொண்டார். ''தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்கு தெரியவில்லை'' (லூக் 23:34) என அவர்களுக்காக மன்றாடுகின்றார். இவ்வாறு இயேசு தீமையைத் தடுக்காமல் ஏற்றுக்கொண்டதன் வெற்றி. அவர் இறந்தபொழுது ஒரு நூற்றுவத்தலைவன் ''இம்மனிதர் உண்மையாகவே இறைமகன்'' (மாற் 15:39) எனக் கூறியதன் மூலமும் சீடர்கள் பலம் பெற்றவர்களாக அவரைப் பற்றிய நற்செய்தியைப் போதித்ததன் மூலமும், இன்று எண்ணிலடங்கா மனிதர்கள் அவரைப் பின்பற்றுவதன் மூலமும் வெளிப்படுகின்றது.

''உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்;
உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் - இயேசு (மத் 5:44)


**தா.ஆ.றெஜிக்குமார்.**

# நிகழ்வுகள்... நிகழ்வுகள்...




சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாகக் கலந்து கொண்ட பேராசிரியர் ச.சத்தியசீலன், விரிவுரையாளர் திருமதி அனுஷியா சத்தியசீலன், ஆங்கில விரிவுரையாளர் திருமதி க.சிவராஜி, வைத்திய கலாநிதி சி.சிவானந்தராஜா ஆகியோர் விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். (203)




தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்திலே அண்மையில் இலவச மருத்துவமுகாம் நடத்தப்பட்டது.

மருத்துவமுகாமில் வைத்திய கலாநிதி எஸ்.பவானி பெண்மணி ஒருவருக்கு வைத்திய பரிசோதனை மேற்கொள்ளப்படுவதைப் படத்தில் காணலாம்.. (218)



யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்களமும்- நயினாதீவு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து ஸ்தயல்பயிற்சிக் கண்காட்சியை அண்மையில் நடத்தியது.

நிகழ்வில் பிரதமவிருந்தினரான கிராம அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி எஸ்.தியாகமூர்த்தி நாடாவை வெட்டி கண்காட்சியைத் திறந்து வைப்பதையும் அருகில் எஸ்.அழகேந்திரன் நிற்பதையும் படத்தில் காணலாம். (95)



ஆனைக்கோட்டை குணபால வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா அண்மையில் இடம்பெற்றது.

கால்கோள் விழாவிற்குரிய மாணவர்களை மாலைகள் அணிவித்து சிரேஷ்ட மாணவர்கள் ஊர் வலமாக அழைத்துவருவதைப் படத்தில் காணலாம். *(படம்: தேசன்)*




இடம்பெயர்ந்தவர்களுக்கு வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் சுயதொழில் உபகரணங்களை 'சொன்ட்' அரச சார்பற்ற நிறுவனம் 'சீ.எச்.ஏ' நிறுவனத்தின் நிதியுதவியுடன் வழங்கியது.

'சொன்ட்' நிறுவன அலுவலகத்தில் நடைபெற்ற உபகரணம் வழங்கும் நிகழ்வில் 'சீ.எச்.ஏ' நிறுவனத்தின் யாழ்.மாவட்டப் பிரதிநிதியும் வாழ்வாதாரத் திட்டத்தின் இணைப்பாளருமான ரீ.றஞ்சித் பயனாளி ஒருவருக்கு உபகரணத் தொகுதியை வழங்குவதைப் படத்தில் காணலாம். (202)

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இலங்கை விவகாரத்தில் இந்தியா குளறுபடித்தனமான நிலைப்பாட்டில்

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு பற்றிய சமிக்ஞைகள் மீண்டும் குளறுபடித்தனமாகியே வருகின்றன.

''இலங்கை விவகாரத்தை இந்தியா கையாளும்போது, இலங்கைத் தமிழர்கள் பற்றிய சிரத்தை இந்தியாவுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் விடயமாகும். அதைவிலக்கி இந்தியா நடந்துகொள்ளவே முடியாது.'' - என்ற சாரப்பட இந்திய நாடாளுமன்றத்தில் அறிவிக்கின்றார் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி.

அது வெறும் நாடாளுமன்றப் பேச்சு மட்டுமல்ல. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை நிலைப்பாட்டை இந்திய நாடாளுமன்றத்துக்கும் - இந்திய தேசத்துக்கும் - இந்திய வெளிவிவகார அமைச்சர் எடுத்துக் கூறும் கொள்கை விளக்க உரையாகும்.

இலங்கை விவகாரத்தில் இலங்கைத் தமிழரின் சிரத்தை இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானது என்று தனது கொள்கை விளக்கத்தை ஒருபுறம் வெளியிடும் இந்தியா, மறுபுறம் இலங்கையில் தமிழரின் இருப்பையே - வாழ்வாதார அடிப்படைகளையே - கேள்விக் குள்ளாக்கும் இலங்கை அரசின் தீவிர இராணுவ நெறிப்போக்குக்கு முண்டு கொடுக்கும் விதத்தில் சமிக்ஞை களை வெளிப்படுத்தி நிற்கின்றது.

அதுவே இன்றைய விசித்திரமான நிலைமையாகும்.

விடுதலைப் புலிகளிடமிருந்து வன்னியை இதோ மீட்கிறோம் என்றும் -

இந்த ஓகஸ்ட் மாதத்துக்குள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் காலி செய்து விடுவோம் என்றும் -

இனிமேல் அடுத்த பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்குப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கவே மாட்டார் என்றும் -

வரிசையாக சூளுரைத்த கொழும்பு அரசின் பாதுகாப் புத்துறைத் தலைவர்கள், இப்போது தமது காலக்கெடுவை சுமார் ஒன்றரை வருடத்துக்குப் பின் நகர்த்தி அடுத்த வருட இறுதிவரை அதனைத் தள்ளிப் போட் டிருக்கின்றார்கள்.

முகமாலை முன்னரங்கிலும், மன்னாரிலும், மணலாறிலும் கடந்த ஒருவருடமாக முன்நகர்வு முயற்சிகள் எதிர்பார்த்த பலனைத் தராத விரக்தியில் தடுமாறும் பாதுகாப்புத் தரப்பு - வெறும் அறிக்கைப் பிரசாரத்தை மட்டும் நம்பி இனிமேலும் மணலைக் கயிறாகத் திரிக்க முடியாது என்ற யதார்த்தம் விளங்கிய பின்னணியில் - மீண்டும் புதுடில்லிக்குக் காவடி தூக்கத் தொடங்கியிருப்பது துலாம்பரமாகத் தெரிகின்றது.

அதைத்தான் அவர்கள் செய்யவேண்டும்.-வேறு மாற்று மார்க்கமில்லாததால் அதுவே அவர்கள் வழியாகிறது என்பது புரிகிறது.

ஆனால் அவர்களின் காவடி ஆட்டத்துக்கு ஏற்றாற் போல புதுடில்லி காவடிச்சிந்து இசைப்பதுதான், இவ்விவ காரத்தில் தொடர்ந்து பாதிக்கப்பட்டுவரும் தரப்பான ஈழத் தமிழர்களுக்கு ஆச்சரியத்தையும், விசனத்தையும், ஆதங்கத்தையும் ஏற்படுத்துகின்றன.

அதுவும், இலங்கைத் தமிழர்களின் நலன் பற்றிய சிரத்தையே எமக்கு முக்கியமானது என்று தனது வெளி நாட்டுக் கொள்கை நிலைப்பாட்டை வெளியிட்டுக் கொண்டே மறு பக்கத்தில், இலங்கைக்கு ஆயுத தளபாட வசதிகளையும் உதவிகளையும் வழங்கி, அங்கு தமிழர் விரோத யுத்தத் தீவிரத்துக்கு எண்ணெய்யும் வார்க்கின்றது பாரதம்.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரரும், இலங்கையில் ஜனாதிபதிக்கு அடுத்து பாதுகாப்புத் துறையில் அதி உச்ச அதிகாரமும் செல் வாக்கும் கொண்டவருமான கோத்தபாய ராஜபக்ஷவும், இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகாவும் இந்தியாவில் ''டேராப்'' போட்டிருக்கின்றார்கள். இலங்கை இராணுவத் தளபதிக்கு இந்தியா விசேட இரா ணுவ அணிவகுப்பு மரியாதை கொடுக்கின்றது. இலங்கை யின் வான் பாதுகாப்பு வலுவை மேலும் அதிகரிக்கச் செய்யும் விதத்தில் புதிய 'ராடர்' வேவுக் கருவிகளை இலங்கைக்கு வழங்குகின்றது இந்தியா.

இதுமட்டுமல்ல. இவற்றுக்கும் அப்பால் மேலும் பல ஆயுத தளபாட வசதிகளையும் இந்தியா வழங்கப் போவதாகவும் தகவல்கள் கசிந்திருக்கின்றன.

இந்தியப் பத்திரிகைகளுக்கு அண்மையில் அளித்த பேட்டிகளில் இந்தியாவைப் புகழ்கின்றார் இலங்கை ஜனாதிபதி. அதேபோல அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ வும் இந்தியாவை விதந்துரைக்கின்றார். இலங்கை இராணு வத் தளபதியும் அதேமாதிரி இந்தியாவுக்குக் குஞ்சம் கட்டு கின்றார்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இத்தகைய நிகழ்வுகள், ஒழுங்குகள், செயற்பாடுகள் மூலம் இந்தியா வெளிப்படுத்தும் அதன் இரட்டைவேட கருத்து நிலைப்பாடு ஆரோக்கியமானதல்ல.

'இலங்கையில் விடுதலைப் புலிகளின் கைகள் ஓங்குவதற்கு இந்தியா அனுமதிக்கக்கூடாது.' - என்ற சாரப்பட இந்திய உயர் இராணுவ அதிகாரி ஒருவர் அண்மையில் வெளியிட்டவை எனக் கூறப்படும் கருத்துகள், இந்தியா வின் இன்றைய நிலைப்பாட்டின் உட்பக்கத்தைப் பிரதி பலிக்கும் அம்சமாகக் கொள்ளத்தக்கன.

எது, எப்படியென்றாலும், இந்த இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமக்கு மிக நெருக்கமான - நம்பிக்கைக்குரிய - அயலவர்கள் யார் என்பதைத் தீர்மானிப்பதில் இந்தியா தொடர்ந்தும் தவ்றிழைத்து வருகின்றது என்றே தோன்றுகின்றது.

இராஜதந்திர அரசியலில் கௌரவத்தைப் பார்ப்பதை விட நியாயபூர்வமான நீதியை நிலைநாட்டுவதற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

இலங்கை விவகாரத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களுக்கு நீதி செய்வதை விடுத்து, கௌரவம் பார்க்கின்றது பாரதம். அதனால்தான் அது கொழும்பை அரவணைத்து நின்று, மீண்டுமொரு வரலாற்றுக் குற்றத்தை இழைக்கின்றது.

# மாவட்டத்தில் வைத்தியர்கள் பற்றாக்குறை: எமது வைத்தியசாலைகள் பல மூடப்படும் அபாயம்

## கவலை வெளியிடுகின்றார் சுகாதாரப் பணிப்பாளர்



கரவெட்டி,மார்ச்6

யாழ்.மாவட்டத்திலுள்ள பல வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானால் அவ் வைத்திய சாலைகளை மூடவேண்டிய நிலை ஏற்பட லாம்.

இவ்வாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கவலை வெளியிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறையில் நடைபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடாநாட்டில் கல்வி கற்றுத் தேர்ந்த வைத்தியர்கள் எமது மக்களில் ஒரு கூறே. எமது பிரதேச இயற்கை வளங்களைப் பயன்படுத்தி மருத்துவபீடத்தில் கல்வி கற்று வெளியேறியவர்கள் மக்களின் இன்றைய தேவைகளைக் கருத்தில்கொள்ளாது வெளிமாவட்டங்களைத் தேடி ஓடுகின்றனர். இதுவே இங்குள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர் பற்றாக்குறை நிலவுவதற்குக் காரணம் என்பது பலருக்கும் பெரும் வேதனையைத் தருகின்றது.

குடாநாட்டில் 36 அரச வைத்திய சாலைகள் உள்ளன. இவற்றில் பல வைத்திய சாலைகளில் வைத்தியர் கள் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. அனைத்து வைத்தியசாலைகளுக்கும் ஒட்டுமொத்தமாக 117 வைத்தியர்கள் தேவையாக உள்ளனர். ஆனால், தற்போது 23 வைத்தியர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர். மேலும் இவர்க ளில் சிலர் ஓய்வு பெறும் எல்லையில் உள் ளனர். இவர்களும் விடைபெற் றால் சில வைத்தியசாலைகள் மூடப்படும் நிலை ஏற்படலாம்.

எனவே எமது நிலையினைக் கருத்தில்கொண்டு வைத்தியப் படிப்பை முடித்து வெளியேறும் வைத்தியர்கள் தங்கள் சொந்த இடமான இங்கு ஆரம்ப சேவையினைப் பொறுப்பேற்று சேவை செய்ய முன்வரவேண்டும் - எனத் தெரிவித்தார். (202-70)

# "உதயன்" அனுசரணையுடன்
# 'வீரர்களின் போர்' துடுப்பாட்டம் நாளை ஸ்கந்தாவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச் 6

வலிகாமத்தில் பலம் வாய்ந்த அணிகளுக்கிடையிலான ''வீரர்களின் போர்'' துடுப்பாட்டம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நாளை கோலாகலமாக ஆரம்பமாகிறது. இப்போட்டித் தொடர்இரண்டுதினங்கள்தொடர்ந்து நடைபெறும்.

'உதயன்'' அனுசரணையுடன்இடம் பெறும் இத்துடுப்பாட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் மோதுகின்றன.

எட்டாவது ஆண்டாக இடம்பெ றும் இந்த ''வீரர்களின் போர்'' ஆட்டம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி, மகாஜனக்கல்லூரி அதிபர் திருமதி சி. அனந்தசயனன் ஆகியோரின் இணைத் தலைமையில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

ஆட்ட ஆரம்பநிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவர் கலாநிதி அ.சக்திவேலும், கௌரவவிருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ். ''ரெலிக்கொம்'' மின் பதவிநிலை உத்தியோகத்தர் ச.ஜனார்த்தனனும் துறைசார் விருந்தினராக வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசாவும் கலந்து கொள்வர்.

ஆரம்ப நிகழ்வுகள்முடிவடைந்தபின் ஆட்டம் மு.ப. 10 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணிக்கு முடிவடையும். மறுநாள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டம் பி.ப. 3.30 மணிக்கு முடிவடையும். அதன் பின்னர் பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஆட்டங்களில் 2005 ஆம் ஆண்டு ஸ்கந்தா வெற்றி பெற்றது. ஏனைய ஆண்டுகளில் நடந்த ஆட்டங்கள் சம நிலையில் முடிவடைந்தன.

இம் முறை ஆட்டத்தில் இரு அணிகளும் பலமான நிலையில் இருப்ப தால் வெற்றி, தோல்வி எந்த அணிக்கு என்பதை முற் கொண்டு கணிக்க முடியாது என்று ரசிகர்கள்கூறுகின்றனர். (அ-1-86)

# திருமுருகனின் நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், மார்ச்6

சிவராத்திரி விழாவும், ஆறு திருமுருகனின் ''ஆஸ்திரேலியா ஆன்மீக உரைகள்'' ஆங்கில மொழி பெயர்ப்பு நூல் வெளியீடும்இன்றுகாலை9.30மணியளவில் சுழிபுரம்சிவபூமி முதியோர்இல்ல பாலச்சந்திரன்அரங்கில்நடைபெறவுள்ளன.

யாழ்.மேலதிக மாவட்ட நீதிபதி இரா. வசந்தசேனன் நூலை வெளியிட்டு உரை நிகழ்த்துவார் நயப்புரை களை இளைப்பாறிய அதிபர் மூதறிஞர் சிவசரவணபவன் (சிற்பி), ஆசிரியர் ரி.என்.பஞ்சாட்சரம், யாழ்.பல் கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் திருமதி கருணாதேவி சிவாஜி ஆகியோர் நிகழ்த்துவர். (202-95)

# கொமர்ஷல் வங்கியின் 'அருணலு' பரிசளிப்பு விழா இன்று காலை

யாழ்ப்பாணம்,மார்ச்6

கொமர்ஷல் வங்கி யாழ்.கிளையின் வருடாந்த 'அருணலு' பரிசளிப்பு நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கிள்ளை அலுவலகத்தில் நடை பெறவுள்ளது.

கடந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 'அருணலு' சேமிப் பைப் பேணும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# மக்கள் வங்கி வடமராட்சியில் மாணவர்களைக் கௌரவிக்கிறது

யாழ்ப்பாணம்,மார்ச்6

வடமராட்சியில் கல்வியில் சாதனை படைத்த மாணவர்களை மக்கள் வங்கியின் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி ஆகிய கிளைகள் இணைந்து கௌரவிக்கவுள்ளன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குப் பருத்தித்திறை சிவன் கோயில் பார்வதவர்த்தனி கலா மண்டபத்தில் இக்கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறைக் கிளைமுகாமையாளர் மு.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ.அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்வார்.

2007ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்ற ஹாட்லிக் கல்லூரி மாணவன் வி.ரஜீவன், 2006ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் தேசிய மட்டத்தில் 19ஆம் இடத்தைப் பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் க.எழில்வேள்-

தேசிய மட்டத்தில் சிசு உதான புலமைப் பரிசில் பெறும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் சி.சஞ்ஜை ஆகியோரும்-

வடமராட்சி வலயத்திற்குள் கடந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 3ஏ சித்தி பெற்ற 23 மாணவர்களும் இந்நிகழ்வில் வைத்துக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(202)

# சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பதன் மூலம் சமாதானமும் சிறந்த எதிர்காலமும் மலரவேண்டும்

## யாழ்.படைகளின் தளபதியின் செய்தி

யாழ்ப்பாணம்,மார்ச்6

சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பதன் மூலம் அனைவருக்கும் சமாதானமும் சிறந்த எதிர்காலமும் மலரப் பிரார்த்திக்கின்றேன் - என யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

சிவராத்திரியை ஒட்டி அவர் விடுத்துள்ள செய்தியில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆதிகாலம் தொட்டு உலகம் முழுவதிலும் உள்ள இந்து பக்தர்கள் பக்தியுடன் கொண்டாடும் மகா சிவராத்திரி வைபவம் யாழ்.பிரதேசத்தில் வாழும் இந் துக்களுக்கு மிக முக்கிய வைபவம் என் பதை நான் அறிவேன். இம்முறை இன்று கொண்டாடும் சிவராத்திரி யாழ்.மக்கள் மட்டுமின்றி உலகவாழ் இந்து பக்தர்கள் ஒன்றிணைந்து பயபக்தியுடன் ஒரே நேரத்தில் சிவபெருமானுக்கு நடத்தும் பூஜை வழிபாடுகள் மூலமும், உபவாசமிருந்தும் பக்தியை வெளிப்படுத்தி, செல்வத்தையும் சமூகத்தின் விடிவை, நல்லொழுக்கத்தை, மேம்பாட்டை வேண்டி நடத்தும் விசேட வழிபாடாகும்.

உலகைப் பரிபாலிக்கும் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளில், மானிடர் இருள் நீங்கி வாழ்வு உய்ய முதன்மையான சிவபெருமானை வழிபடுவதன் மூலம் உலகு உரிய முறையில் இயங்க சக்தியும் வலிமையும் கிடைக்கப் பெறுகிறதென்பது தொன்றுதொட்டு இற்றைவரை கொண்டுள்ள நம்பிக்கையாகும்.

இவ்வாறு சிவனை வழிபடும் யாழ் இந்து பக்தர்கள் பிரார்த்திப்பதும், நாட்டின் ஏனைய மதத்தவர்களும் தமது மத அனுட்டானங்களின்படி வேண்டுவதும் ஒரே பிரார்த்தனையே ஆகும். நம் நாட்டில் வாழும் சமூகங்களின் சமய கலாசார வழிபாடுகள் வேறுபட்டாலும் அவர்களுக்குள் உள்ள எண்ணங்கள் கருத்துக்கள் பிணைந்திருப்பது அவர்களின் சகோதரத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

ஆனபடியால் மகா சிவராத்திரியில் சிவனை வழிபடும் நீங்கள் உங்களை தொடர்ந்தும் இருளுக்குள் தள்ளி விட்டு பிரிவினைக்குள்ளாக்குவது யார் என்பதை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இம்முறை சிவனை வழிபட்டு, பூஜை வழிபாடுகளுக்கு அப்பாற் சென்று உங்கள் சமூகத்தில் சீர்குலைவையும் பிரிவினையையும் உண்டாக்கி எதிர்கால சந்ததியை அழித்தொழிக்கும் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவர உங்கள் மீதுள்ள கடப்பாட்டை உணர்ந்துகொள்வதன் மூலம் சிவனின் மனித குல மீட்சியின் அர்த்தத்தை உணர்த்தமுடியும்.

இன்று நீங்கள் கொண்டாடும் மகா சிவராத்திரியின் பயனால் உங்கள் மேன்மையான எண்ணங்கள் நிறைவேறி உங்கள் வாழ்வு சௌபாக்கியமுள்ளதாக ஆகுவதற்கு சிவனின் அருளால் அனைவருக்கும் சமாதானமும், சௌபாக்கியமும், நற்சுகமும், நீண்ட ஆயுளும், சிறந்த எதிர்காலமும் மலர வேண்டும் என்று பிராத்திக்கின்றேன்- என்றுள்ளது. (1)

## நாளை

| | |
|---|---|
| மாசி - 24 | 07.03.2008 வெள்ளிக்கிழமை |
| திதி: அமாவாசை | மு.இ. 11.23 வரை |
| நட்சத்திரம் : | சதயம் பி.ப. 05.02 வரை |
| அமாவாசை விரதம் | |
| சுபநேரம் : | 06.24 - 07.54 |
| ராகுகாலம் : | 10.54 - 12.24 |

# குளோகோமா என்னும் கண்வியாதியைப் போக்க எல்லா வயதினரும் அக்கறை கொள்வது அவசியம்

உலக 'குளோகோமா' தினம் இன்று 6ஆம்திகதி அனுஷ்டிக்கப்படுவதை யொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப் படுகிறது.

'குளோகோமா'(Glaucoma) குளோகோமா என்பது ஒரு தொகுதி கண் வியாதி, ஒவ்வொன்றும் அவற்றிற்குரிய குணாதிசயங்களைக் கொண்டது.

இவை படிப்படியாகக் கண் நரம்பைப் பாதிக்கும். குறிப்பாக கண் நரம்பை தலைப் பகுதியில் (Optic Disc) இதனை குணப் படுத்தாவிடில் கடைசியில் குருட்டுத் தன்மை ஏற்படும், (Blindness)

இந்த வியாதி சம்பந்தமான போதிய விழிப்புணர்வு மக்களிடையே தேவை. முக்கிய காரணம் நோயின் ஆரம்பத்தில் எதுவித அறிகுறியும் தோன்றாது. அதே வேளை இந்நோயை கண்டுபிடித்து சரியான முறையில் மருத்துவம் செய்தால் (கண் வைத்தியரின் ஆலோசனைப்படி)


குருட்டுத்தன்மை உண்டாவது மிகவும் அரிது, அத்துடன் இந்நோயின் தாக்கத்தையும் தடுத்து நிறுத்தலாம்.

குளோகோமாவுடன் தொடர்புடைய முக்கிய காரணி கண் அழுத்தம்(Intru lower-pressure)

கண்ணுக்குள் நீர்மயவுட நீர் (Aqucous) என்ற திரவம் தொடர்ந்து சுரக்கப்படுகின்றது.

இந்நீர் கண் முற்பகுதிக்கு ஊட்ட சத்துக்களை வழங்கி கழிவுகளை அகற்றுகின்றது.

சிலருக்கு இந்நீர் அகற்றப்படும் கண்கள்



சுருங்கியோ அடைபட்டோ அல்லது கண்கள் ஊடான பாய்ச்சல் குறைக்கப்படுமாயின் இதனால் தொடர்ந்து சுரக்கப்படும் திரவத்தின் அளவால் கண்ணினுள் அமுக்கம் கூடுகிறது.

இந்த கண்அமுக்கமே பெரும்பாலான குளோகோமா வியாதியுடன் தொடர்புடையது.

கீழ் குறிப்பிடுகின்ற காரணிகளில் ஒன்றோ பலவோ இருப்பின் அவர் குளோகோமா வியாதியால் பாதிக்கப்படலாம்.

* வயதுவந்த எந்த வயதினரும் பாதிக்கப்படுவர் எனினும் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் கூடிய அளவில் பாதிக்கப்படுவார்கள்.
* கிட்டிய உறவுக்காரர் குளோகோமாவால் பாதிக்கப்பட்டிருந்தால்
* குறும்பார்வை/ தூரப்பார்வை உடையவர்கள்
* சலரோகம்
* உயர் குருதி அமுக்கம்
* ஒற்றை தலைவலி உடையவர்கள்.

சிகிச்சை முறை:

தற்போதைய சிகிச்சை முறையின்படி கண் அமுக்கத்தை குறைப்பதன் மூலம் பெரும்பாலும் இந்த வியாதியிலிருந்து விடுபடலாம். இது இரு பிரதான வழிமுறைகளால் ஏற்படுகிறது.

* கண்ணினுள் உற்பத்தியாக்கப்படும் நீரின் அளவைக் குறைத்தல்.
* கண்ணிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவைக் கூட்டுதல்.
* இதற்கு மூன்று வகையான சிகிச்சை முறைகள் உள்ளன.
* கண் மருந்துத் துளிகள் பாவிப்பது (Anra Glaucoma drugs)

இதுவே பொதுவானதும், ஆரம்ப சிகிச்சை முறையுமாகும். பெரும்பாலானவர்களுக்கு இந்த முறை மூலம் குணப்படுத்தலாம்.

* லேசர் சிகிச்சை முறை
* சத்திர சிகிச்சை முறை:- நோயின் இறுதிக் கட்டத்தில் உள்ளவர்களுக்கு பொருத்தமானது.

ஆலோசனை: 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் அபாய காரணி உடையவர்கள் கண் வைத்தியரை நாடி இந்நோயின் தாக்கம் இருக்கின்றதா இல்லையா என அறிய வேண்டும்.

அவ்வாறு நோய் இருப்பின் கண் வைத்தியரின் ஆலோசனைப்படி சிகிச்சை பெற வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம் நோய் தாக்கத்திலிருந்து விடுபடலாம். இந்நோயை தடுக்கவும் முடியும்.

இந் நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி இந் நோயினால் எமது நாட்டில் ஏற்படும் குருட்டுத் தன்மையை குறைப்பது அல்லது தடுப்பதுமே. எமது நோக்கமாகும்.

**டாக்டர் மு. மலரவன்**
**(M.B.B.S., M.D)**
**கண் ஆஸ்பத்திரி, கொழும்பு.**

# 13ஆவது திருத்த அமுலாக்கம் குறித்து ஜே.வி.பியுடன் பேச ஜனாதிபதி தயாராம்!

**தேவையானால் 'புடலங்காய்', 'இரும்புத்துண்டுகள்' போன்றவற்றுடனும் அவர் பேசுவாராம்**

கொழும்பு, மார்ச் 6

இனப்பிரச்சினைக்கான தீர்வாக அரசினால் நடைமுறைப்படுத்தப்பட உத்தேசிக் கப்பட்டிருக்கும் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக ஜே.வி.பியுடனும் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தயாராகவுள்ளார் என்று அரசின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் 'புடலங்காய்', 'இரும்புத் துண்டுகள்' உள்ளிட்ட எல்லாவற்றுடனும் பேச்சு நடத்த ஜனாதிபதி தயாராகவிருக்கின்றார் என்றும் அவர் சொன்னார்.

இவ்விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இனப்பிரச்சினையை அரசியல் தீர்வின் ஊடாக முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி தயாரா கவுள்ளார்.

அவரின் வேலைத் திட்டங்களை ஜே.வி.பியினர் ஒரு போதும் விமர்சிக்கக் கூடாது. இது தொடர்பாக ஜே.வி.பியுடன் பேச ஜனாதிபதி தயாராகவிருக்கின்றார்.

இதை நடைமுறைப்படுத்துவதற்காக அவர் புடலங்காய், இரும்புத் துண்டுகள் உள்ளிட்ட எல்லாத் தரப்புகளுடனும் பேசத் தயாராகவிருக்கின்றார். அவ்வளவு தூரம் அவர் இதில் உறுதியாக இருக்கின்றார்.

இது தொடர்பாக எவரும் கேள்வி எழுப்ப முடியாது.

இவ்விடயம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் ஜனாதிபதி பேச்சு நடத்தியிருக்கின்றார்.

இதனை அறியாத ஐ.தே.கட்சியின் எம்.பிக்கள் சிலர் ரணில் விக்கி ரமசிங்கவை மோசமாக விமர்சிக்கின்றனர் - என்றார். (சி)

# ப.நோ.கூ. சங்கங்களுக்கு யாழ். செயலகத்தால் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,மார்ச்6

குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்கள் ப.நோ.கூ. சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட இருக் கின்றன.

பொருள்கள் தேவைப்படும் சங்கங்கள் செயலகத்தில் வழங்கற் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

பொருள்களின் விவரம் வருமாறு:

| பொருள் | பொருள்களின் விலை DRRS | MPCS | பொருள் | பொருள்களின் விலை DRRS | MPCS |
|---|---|---|---|---|---|
| அரிசி நாடு (1) | 64.00 | 66.00 | லக்ஸ்பிறே (400g) | 276.00 | 277.00 |
| அரிசி நாடு (2) | 61.00 | 63.00 | பட்டாணிப்பருப்பு | 102.00 | 104.00 |
| அரிசி நாடு (3) | 62.00 | 64.00 | புளி | 42.00 | 44.00 |
| அரிசி தீட்டல் (1) | 64.00 | 66.00 | சர்க்கரை | 52.00 | 54.00 |
| அரிசி தீட்டல் (2) | 56.50 | 58.50 | கற்கண்டு | 109.00 | 111.00 |
| அரிசி தீட்டல் (3) | 55.00 | 57.00 | கடலை | 115.00 | 117.00 |
| அரிசி தீட்டல் (4) | 57.00 | 59.50 | பயறு | 121.00 | 123.00 |
| அரிசி தீட்டல் (5) | 62.00 | 64.00 | சன்லைட் சோப் | 26.00 | 27.00 |
| பருப்பு (1) | 115.50 | 117.50 | தேயிலை (Highland Ceylon) | 270.00 | 272.00 |
| பருப்பு (2) | 118.50 | 120.50 | தேயிலை | 229.00 | 231.00 |
| சீனி (1) | 60.50 | 62.50 | தேயிலை (Janavasama) | 260.00 | 262.00 |
| அரிசி சம்பா | 62.00 | 64.00 | தேயிலை (1Kg Pkt) | 222.00 | 224.00 |
| கோதுமை மா | 79.00 | 81.00 | தேயிலை (500g Pkt) | 129.00 | 130..0 |
| அங்கர் (250g) | 173.00 | 174.00 | தேயிலை (Jana 500 Pkt) | 140.00 | 142.00 |
| | | | தேயிலை (Jana 500 Pkt) | 130.00 | 131.00 |

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 07.02.2008 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**திருமதி செல்லப்பா செல்வராசு**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை நாளை (07.03.2008) வெள்ளிக் கிழமை காலை வில்லூன்றித் தீர்த்தக்கரையில் நடைபெற்று, வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 08.03.2008 சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற வுள்ளன. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக் கின்றோம்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
0602218174

குடும்பத்தினர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

965 நீலம்

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம்

**14 27 49 53**

04-03-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 4658293 - 4674170

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 347,666 | 10/- | 3,476,660/- |
| 2 இலக்கங்கள் | 31,968 | 20/- | 639,360/- |
| 1 இல. + லக்கினம் | 31,421 | 30/- | 942,630/- |
| 2 இல. + லக்கினம் | 2,886 | 100/- | 288,600/- |
| 3 இலக்கங்கள் | 855 | 500/- | 427,500/- |
| 3 இல. + லக்கினம் | 73 | 5,000/- | 365,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 7,539,750/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 414,879 | | 8,563,250/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5554685 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 மார்ச் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 4666637-1-06 |
| மொனராகலை | 4663599-1-05 |
| இரத்தினபுரி | 4663051-3-80 |
| கம்பஹா | 4670694-9-58 |
| குருநாகல் | 4659573-6-81 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

நவாலி, மார்ச் 6

ஆனைக்கோட்டை ஜே/133கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட காக்கைதீவிலுள்ள விழுதுகள் சிறுவர் கழகம், ஆனைக்கோட்டையிலுள்ள மலரும் மலர்கள் சிறுவர் கழகம் ஆகியவற்றிற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம்விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளது.

இவற்றை கொண்டு அப்பகுதி சிறுவர்கள் மாலை வேளையில் பலதரப்பட்ட விளையாட்டுகளில் ஈடுபட்டு வருவதைக் காண முடிகிறது.

## வலுவிழந்தோருக்கு முச்சக்கரவண்டி

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மூன்று வலுவிழந்தோருக்கு மூன்று முச்சக்கர வண்டிகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

முச்சக்கர வண்டி தருமாறு கோரி விண்ணப்பம் செய்தவர்கள் உடனடியாகப் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரிவு சமூக சேவை உத்தியோகத்தர் வே.அருந்தவராசா கேட்டுள்ளார். (135)

## இங்கிலாந்துடனான டெஸ்ட்

# முதல் நாள் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 282-6



ஜம்மி கௌவ்

ஹமில்ரன், மார்ச் 06

இங்கிலாந்துக்கு எதிராக நேற்று ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 282 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இங்கிலாந்துப் பந்துவீச்சாளர்கள் கட்டுக்கோப்பாகப் பந்துவீசி நியூஸிலாந்து வீரர்களின் ஓட்டக்குவிப்பைப் பெருமளவில் கட்டுப்படுத்தினர். இருந்தபோதும் சிறப்பாக ஆடிய ஜம்மிகௌவ், பிரண்டன் மக்கியூலம் ஆகியோர் அரைச்சதம் அடித்து அணியைக் காப்பாற்றினர்.

நியூஸிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள இங்கிலாந்து அணி முதலில் பங்குபற்றிய ஒருநாள் தொடரை 1-3 என்ற கணக்கில் இழந்தது. இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நேற்று ஹமில்ரனில் ஆரம்பமானது. இப்போட்டியில் இங்கிலாந்து அணி சார்பாக விக்கெட் காப்பாளர் ரிம் அம்புரோஸ் அறிமுகமாகியிருந்தார். நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஜம்மி கௌவ், மத்தியூ பெல் ஆகியோர் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். இருவரும் மிக நிதானமாக ஆடினர். முதல் விக்கெட்டுக்காக 44 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் 19 ஓட்டங்களைப் பெற்றிருந்த மத்தியூ பெல், ஹர்மிஸனின் வேகத்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களம்புகுந்த ஸ்ரீபன் பிளெமிங் சிறப்பான ஒத்துழைப்பு வழங்க மறுமுனையில் நின்ற ஜம்மி கௌவ் அபாரமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக 64 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகக் கிடைக்கப் பெற்ற நிலையில் பிளெமிங் 41 ஓட்டங்களுடன் (73 பந்துகள், 8 பவுண்டரிகள்) சைட்பொற்றமின் வேகத்தில் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த சிங்ளேயர் 8 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

மறுமுனையில் அபாரமாக ஆடிய ஜம்மி கௌவ் டெஸ்ட் அரங்கில் முதல் அரைச்சதத்தைப் பதிவுசெய்தார். அத்துடன் 4ஆவது விக்கெட்டுக்காக ரோஸ் ரெய்லருடன் இணைந்து 47 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றுக்கொடுத்தார். இந்நிலையில் ஜம்மி கௌவ் 91 ஓட்டங்களுடன் (180 பந்துகள், 12 பவுண்டரிகள்) பனிஷரின் சுழலில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். தொடர்ந்து வந்த ஜேக்கப் ஓரம் வெறும் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

6ஆவது விக்கெட்டில் இணைந்த ரோஸ் ரெய்லர் - பிரண்டன் மக்கியூலம் ஜோடி அணியை 250 ஓட்டங்களுக்கு அப்பால் அழைத்துச் சென்றது. அதிரடியாக ஆடிய பிரண்டன் மக்கியூலம் 55 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 51 ஓட்டங்களை விளாசி ஆட்டமிழந்தார்.

நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில் நியூஸிலாந்து அணி 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 282 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ரோஸ் ரெய்லர் 54 ஓட்டங்களுடனும், விக்ரோறி 4 ஓட்டங்களுடனும் களத்தில் நம்பிக்கை தருகின்றனர். இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெறும்.

# ஐ.சி.சி. தரவரிசை சச்சின் 'நம்பர்-1'

டுபாய், மார்ச் 06

ஆஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்புக் கிரிக்கெட் தொடரின் இரண்டு இறுதிப்போட்டியிலும் முறையே 117,91 ஓட்டங்களைக் குவித்த இந்திய நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) தரவரிசையில் மீண்டும் முதலிடத்தைப் பிடித்து இருக்கிறார். அவர் 777 புள்ளிகளுடன் இந்த இடத்துக்கு முன்னேறியிருக்கிறார்.

முத்தரப்புத் தொடர் நிறைவுற்ற நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபை புதிய தரவரிசைப் பட்டியலை நேற்று வெளியிட்டது. இதில் துடுப்பாட்ட வீரர்களுக்கான வரிசையில் சச்சின் முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவரை விட 7 புள்ளிகள் குறைவாக உள்ள ஆஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங் 2ஆவது இடத்தில் இருக்கிறார். இந்தத் தொடரில் 300 ஓட்டங்களுக்கு மேல் குவித்தும், 20 பேரை ஆட்டமிழக்க செய்வதற்கு உதவியவருமான இந்திய விக்கெட் காப்பாளரும், அணித்தலைவருமான டோனி 10ஆவது இடத்துக்கு முன்னேறியிருக்கிறார்.

ஒருநாள் போட்டி அணிகள் தரவரிசையில் இந்தியா 113 புள்ளிகளுடன் 3 இடங்கள் முன்னேறி 4ஆவது இடத்தைப் பெற்றிருக்கிறது. 3ஆவது இடத்தில் உள்ள நியூஸிலாந்தும் அதே புள்ளிகளுடன்தான் உள்ளது. ஆனால், 'டெசிமல்' புள்ளி கணக்கீட்டில் இந்தியாவை விட முந்துகிறது.

130 புள்ளிகளுடன் இருந்த ஆஸ்திரேலியா தோல்வியின் மூலம் 127 புள்ளிகளாகக் குறைந்திருக்கிறது. தென்னாபிரிக்காவும் இதே புள்ளிகளுடன் இருந்தாலும், டெசிமல் புள்ளிக் கணக்கீட்டில் ஆஸ்திரேலியா தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கிறது.

# இந்தியாவுக்கு 10 கோடி ரூபா

முத்தரப்புத் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற இந்திய அணிக்கு பெரும் பணப் பரிசு அளிக்கப்படவுள்ளது. அத்துடன் புடில்லியில் இன்று பிரமாண்டமான வெற்றி விழாவுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அணிக்கு ரொக்கப் பரிசாக 10 கோடி ரூபா (இந்திய ரூபா) அளிக்கப்படும் என இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் சரத் பவார் அறிவித்துள்ளார்.

# நாங்கள் தாயகம் திரும்புகின்றோம் இனி யாரைத் தூற்றப் போகிறீர்கள்

## ஆஸி. ஊடகங்களிடம் டோனி கேள்வி

பிரிஸ்பேன், மார்ச் 06

இந்திய வீரர்கள் குறித்து விமர்சித்த ஆஸ்திரேலிய ஊடகங்களைக் கடுமையாக சாடியுள்ளார் அந்த அணியின் தலைவர் மகேந்திர சிங் டோனி.

இது குறித்து டோனி கூறியவை வருமாறு:-

"ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் தொடர்ந்து ஹர்பஜனைப் பற்றித்தான் எழுதின. நாங்கள் தாயகம் திரும்பி விடுவோம். இனி எழுதுவதற்கு வேறு யாரையாவது அவர்கள் தேட வேண்டும். அவர்கள் பரபரப்பாக எழுதியதைப் பார்த்தால் அவர் ஹர்பஜனா அல்லது மைக்கேல் ஜாக்ஸனா என்று சந்தேகம் வந்தது. ஒரு வகையில் இது பயனுள்ளதாக இருந்தது. சர்ச்சைகளால் அவருடைய மனஉறுதி அதிகரித்தது. நாங்கள் போன பிறகு எதைப் பற்றி எழுதுகிறார்கள் என்று ஆர்வத்துடன் இணையத்தளத்தில் தேடிப் பார்ப்பேன்.

"முத்தரப்புத் தொடர் வெற்றி அணித்தலைவரால் மட்டும் வந்ததல்ல. ஒட்டுமொத்த அணியும் சிறப்பாக விளையாடியதால் வந்த வெற்றி. பியூஷ் சாவ்லாவை இறுதியாட்டத்தில் விளையாட வைத்து ஆஸ்திரேலிய அணிக்கு அதிர்ச்சி தர நினைத்தோம். அவரும் நாங்கள் நினைத்ததை செய்து காட்டினார். தொடர்ந்து விளையாடி வருவதால் ஓய்வெடுக்க நேரமில்லாமல் போய் விட்டது. புத்துணர்ச்சி பெற ஒவ்வொருவருக்கும் ஓய்வு தேவை." - இவ்வாறு டோனி கூறினார்.

# ஒஹியோ, டெக்ஸாஸில் ஹிலாரி வெற்றி

## குடியரசுக் கட்சி வேட்பாளராக மெக்கெய்ன்



வெற்றியை ஆதரவாளர்களுடன் பகிர்ந்துகொள்ளும் ஹிலாரி

டெக்ஸாஸ், மார்ச் 06

ஜனநாயகக் கட்சி சார்பில் அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் வேட்பாளரைத் தேர்வு செய்வதற்காக ஒஹியோ, டெக்ஸாஸ் மாநிலங்களில் நடைபெற்ற தீர்க்கமான முதல் கட்ட வாக்குப்பதிவில் ஒபாமாவைப் பின்னுக்குத் தள்ளி ஹிலாரி கிளின்ரன் வெற்றி பெற்றுள்ளார்.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் வேட்பாளராகப் போட்டியிடுவதற் ஜோன் மெக்கெய்ன் தகுதி பெற்றுள்ளார். நேற்றுமுன்தினம் நடந்த ஒஹியோ, டெக்ஸாஸ் மாநில வெற்றிகளைத் தொடர்ந்து குடியரசுக் கட்சியின் வேட்பாளராக அவர் போட்டியிடுவது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதிப் பதவிக்கு ஜனநாயகக் கட்சி சார்பில் வேட்பாளராகப் போட்டியிட ஹிலாரி கிளின்ரனுக்கும், பராக் ஒபாமாவுக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

சில மாகாணங்களில் ஹிலாரியை விட அதிக வாக்குகள் பெற்று ஒபாமா முன்னிலை பெற்றிருந்த நிலையில், இரண்டாவது 'சூப்பர் ரியூஸ்டே' என்று வர்ணிக்கப்பட்ட நேற்றுமுன்தின வாக்குப் பதிவில் ஹிலாரி பெரு வெற்றியைப் பதிவுசெய்துள்ளார்.

ஒஹியோ மாநிலத்தில் 54 சதவீத வாக்குகளை ஹிலாரியும், 44 சதவீதவாக்குகளை ஒபாமாவும் பெற்றனர். டெக்ஸாஸ் மாநிலத்தில் ஹிலாரிக்கு 51 சதவீத வாக்குகளும், ஒபாமாவுக்கு 47 சதவீத வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. ரோடித் தீவுகளில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஹிலாரிக்கு 58 சதவீதமும், ஒபாமாவுக்கு 40 சதவீதமும் ஆதரவு கிடைத்தன. வெர்மொன்ற் மாநிலத்தில் ஒபாமாவுக்கு 60 சதவீத வாக்குகளும், ஹிலாரிக்கு 38 சதவீத வாக்குகளும் பதிவாகின.

மேற்படி நான்கு மாநிலங்களில் குடியரசுக் கட்சி சார்பில் ஜோன் மெக்கெய்ன் பெரு வெற்றியைப் பதிவுசெய்தார். இதன் மூலம் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அவர் போட்டியிடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனினும், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் யார் என்பதில் தொடர்ந்து இழுபறி நீடிப்பதாகக் கருதப்படுகிறது. இதுவரை நடந்து முடிந்த முதல்கட்ட வாக்கெடுப்புகளில் ஒபாமா 1477 பிரதிநிதிகளையும், ஹிலாரி 1391 பிரதிநிதிகளையும் வென்றெடுத்துள்ளனர். இன்னும் சில மாநிலங்களில் நடக்கவுள்ள முதல்கட்ட தேர்தல் முடிவுகளில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் தெரிந்தெடுக்கப்படுவார்.

## உலக அரங்கில்

# மலேஷியப் பொதுத் தேர்தல் நீதியாக அமையாதென சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் ஆரூடம்

நியூயோர்க், மார்ச் 06

மலேஷியாவில் நாளைமறுதினம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் நீதியானதாக அமையாது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மலேஷிய அரசு எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதுடன் தேர்தல் நடைமுறையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைவதாக சர்வதேச மனித உரிமைக் காப்பகம் குற்றம் சாட்டியுள்ளது.

மலேஷியாவில் எதிர்க் கட்சியினருக்கு நீதி வழங்காத தேர்தல் மீண்டும் நடைபெறப் போவதாக மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான இயக்குநர் எலைனி பியர்சன் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு வாக்கும் சரியாக, சமமாக எண்ணப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளதுடன் இது நடைபெறுமா என்பது குறித்து சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

மலேஷியாவை அரை நூற்றாண்டு காலமாக ஆண்டுவரும் ஆளும் கட்சி தொடர்ந்தும் ஆட்சியைத் தக்க வைக்க முனைவதுடன் சீர்திருத்தங்களைத் தடுத்து வருவதாகவும் அந்த அமைப்புக் குற்றம்சாட்டியுள்ளது.

தேர்தல் பிரசாரத்தின் போது ஊடகங்கள் மீதான கட்டுப்பாடு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மலேஷியாவில், இந்துக்களுக்கு அடுத்தபடியாக, கிறிஸ்தவ மக்களும், அதிருப்தியில் உள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாளைமறுதினம் 8ஆம் திகதி நடக்கும் நாடாளுமன்றத் தேர்தலில், மதச் சுதந்திரத்தை ஆதரிப்பவருக்கு வாக்களிக்குமாறு, மலேஷியத் தேவாலயங்கள் அறிவித்துள்ளன.

# பெனாஸிர் வாழ்க்கையைப் படமாக்க கணவர் அனுமதி மறுப்பு

இஸ்லாமாபாத், மார்ச் 06

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் வாழ்க்கை வரலாற்றைப் படமாக்குவதற்க அவரது கணவர் ஆஸிப் அல் சர்தாரி அனுமதி மறுத்துள்ளார்.

பெனாஸிரின் வாழ்க்கையை பொலிவூட் திரைப்பட, தயாரிப்பாளர் மகேஷ் பட்டுடன் இணைந்து படமாக்க பாகிஸ்தான் நிறுவனமான 'ஸ்கைஸ்' திட்டமிட்டிருந்தது. இதில் பெனாஸிராக நடிகை ஷப்னா ஆஸ்மி நடிப்பதாக இருந்தது.

பெனாஸிரின் 'கிழக்கின் மகள்' என்ற புத்தகத்தைத் தழுவியே இந்தப் படத்தை எடுக்க மகேஷ் திட்டமிட்டிருந்தார். எனினும், பெனாஸிர் குடும்பத்தின் அனுமதி கிடைத்த பிறகே இதற்கான பணிகளைத் தொடங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்தப் புத்தகத்தைத் திரைப்படமாக்குவது தொடர்பாக சர்தாரியிடம் ஒப்பந்தம் செய்து கொள்ளவும் மகேஷ் பட் விரும்பினார்.

ஆனால், தனது வாழ்க்கை வரலாற்றைப் படமாக்கும் உரிமையை ஹொலிவுட் நிறுவனம் ஒன்றுக்கு பெனாஸிர் ஏற்கனவே கொடுத்துவிட்டாரென சர்தாரி தெரிவித்தாரெனக் கூறப்படுகிறது.

இந்தியத் தயாரிப்பாளர்களுக்கு பெனாஸிர் வாழ்க்கையைப் படமாக்கும் உரிமையைக் கொடுத்தால், எதிர்மறையான விளைவுகள் ஏற்படும் என சர்தாரியின் வழக்கறிஞர்கள் அவரை எச்சரித்தாலேயே அவர் மகேஷ்பட்டுக்கு அனுமதி கொடுக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

# ஈராக்கில் ஹெலிக்கொப்டர் விபத்து

பாக்தாத், மார்ச் 06

ஈராக்கில் ஹெலிக்கொப்டர் ஒன்று விபத்துக்குள்ளாகி நொறுங்கி விழுந்ததில் அமெரிக்கப் படை வீரர் ஒருவர் உட்பட 8 பேர் உயிரிழந்தனர்.

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட எம் 17 ரக ஹெலிக்கொப்டர் மோசீல் என்ற இடத்திலிருந்து 145கிலோமீற்றர் தொலைவில் காணாமல் போனது. மோசமான வானிலை காரணமாக இந்த ஹெலிக்கொப்டர் விபத்தில் சிக்கி விழுந்து நொறுங்கியதாக ஈராக் இராணுவ அமைச்சகம் கூறியுள்ளது.

ஹெலிக்கொப்டரில் பயணம் செய்த அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர் உட்பட 8 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என இராணுவச் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

# பிரபாகரன் காயமடைந்துள்ளார் என அரசு பொய்ப் பிரசாரம் செய்கின்றது

## சபையில் கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 06

புலிகளின் தலைவர் பிரபாகரன் அரச விமானப் படையினரின் குண்டுத் தாக்குதலால் காயமடைந்தார் எனக் கூறப்படுவது அரசின் பொய்யான அறிவிப்பு என்றும் அவர் நல்ல ஆரோக்கியத்துடன் தமிழீழத்தை நல்ல முறையில் நிர்வகித்து வருகின்றார் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. செல்வராஜா கஜேந்திரன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசர காலச் சட்டம் நீடிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஆழ ஊடுருவித்தாக்கும் படையினரின் தாக்குதல்களால் வடக்கில் எமது மக்கள் அதிகமாகக் கொல்லப்படுகின்றனர்.

விமானத்தாக்குதலாலும், கிளைமோர் தாக்குல்களாலும் எமது மக்கள் கொல்லப்படுகின்றனர்.

அரச படையினரும் துணைப் படையினரும் ஒன்றிணைந்து கடத்தல், கொலை மற்றும் பாலியல் வல்லுறவு போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதை அவர்கள் உடன் நிறுத்த வேண்டும்.

எமது தேசியத் தலைவர் பிரபாகரன் விமானத் தாக்குதலில் காயமடைந்தார் என்று அரசு மக்களிடையே பொய் கூறிக்கொண்டு திரிகின்றது. அது முற்றிலும் பொய்.

பிரபாகரன் எந்தத் தாக்குதலிலும் காயமடையவில்லை. அவர் மிகவும் நலமாக இருக்கின்றார். அவர் மிகவும் திறமையாக எமது பிரதேசத்தை நிர்வகித்து வருகின்றார்.

அரசு இவ்வாறு பொய் கூறுவதையும் எமது மக்களைக் கொன்றொழிப்பதையும் உடன் நிறுத்த வேண்டும்.

எமது தமிழீழக் கொள்கையை இந்த அரசு ஏற்று நாம் பிரிந்து சென்று நிம்மதியாக வாழ எம்மை அனுமதிக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாது தொடர்ந்தும் எமது மக்களைக் கொன்றொழிக்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தால் நாம் தனியாகப் பிரிந்து சென்று தமிழீழத்தை அமைப்போம்.

படையினர் இப்போது மன்னாரைக் கைப்பற்ற முனைகின்றனர். அவர்களால் அதைப் பிடிக்க முடியாதுள்ளது.

அவர்கள் பெரும் அழிவை எதிர்நோக்கி வருகின்றனர்.

10 மீற்றர் நிலத்தைக்கூடப் பிடிக்க முடியாமல் அவர்கள் தடுமாறுகின்றனர். படையினரின் அந்த முயற்சி வெற்றி பெறாது.

அரசு இப்போது வன்னியில் பாரிய உணவுத் தட்டுப்பாடு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. வடக்குக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லவிடாது படையினர் தடுத்து வருகின்றனர்.

கிளிநொச்சியில் உள்ள வைத்தியசாலைக்கான மின்சாரத்தை மூன்றில் இரண்டு பங்காக அரசு மட்டுப்படுத்தியுள்ளது. இதனால், தொடர்ந்தும் குளிரூட்டியில் வைத்துப் பாதுகாக்க வேண்டிய மருந்துப் பொருள்கள் பழுதடைகின்றன.

அரசு இவ்வாறான நடவடிக்கைகளையெல்லாம் நிறுத்தி எமது மக்களை வாழவிடவேண்டும். - என்றார். (சி)

# பலம்வாய்ந்த கூட்டமைப்பு அதற்கு முன் மக்கள் கருத்து

## ரணில் - மங்கள அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 06

பலம்வாய்ந்த கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் நோக்கிலும், பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்பார்த்தும் ஐக்கிய தேசியக் கட்சியும் மங்களவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவும் இணைந்து பொதுவான தேசியக் கொள்கை ஒன்றை உருவாக்குவதற்காக நாடளாவிய ரீதியில் மக்கள் கருத்தைப் பெறத்திட்டமிட்டுள்ளன.

இம்மாதம் 10ஆம் திகதி இக்கருத்துச் சேகரிப்பு நடவடிக்கை தொடங்கப்பட்டு ஜூலை மாத இறுதியில் முழுமை செய்யப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் மங்கள சமரவீரவும் நேற்றுத் தெரிவித்தனர்.

நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறுகையில் -

தற்போது இந்த அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. புதிய - பொதுவான தேசியக் கொள்கை ஒன்றை வகுத்து அதன் அடிப்படையில் நாட்டை நிர்வகிப்பது மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.

இதன் காரணமாக புதிய தேசியக் கொள்கையை உருவாக்குவதற்காக இந்த நாட்டு மக்களின் கருத்துகளை நாடளாவிய ரீதியல் அடி மட்டத்திலிருந்து பெறத்திட்டமிட்டுள்ளோம்.

ஐ.தே.கட்சியும் ஸ்ரீ.ல.சு.க., மக்கள் பிரிவும் சேர்ந்து உருவாக்கிய தேசிய சபையே இந்த நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்லும்.

இதன் ஆரம்ப நிகழ்வு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து ஜூலை மாதம் வரை கருத்துச் சேகரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

கொழும்பில் இம்மாதம் 13,14,15 ஆகிய திகதிகளில் கருத்துச் சேகரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படும். அதேபோல், நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இந்த நடவடிக்கை முன்னெடுத்துச் செல்லப்படும்.

நாட்டு மக்கள் அனைவரும் அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக தமது யோசனைகளைத் தெரிவிக்கலாம் -என்றார்.

இது தொடர்பாக மங்கள சமரவீர கூறுகையில்,

இந்த நடவடிக்கையானது பலம் வாய்ந்த நல்லதொரு கூட்டமைப்பை உருவாக்குவதற்கு முதல் அடியாக இருக்கும். வரப்போகும் பொதுத் தேர்தலுக்கும் பொருத்தமானதாக இருக்கும் - என்றார். (சி)

## அராலி மத்தியில் ஆலயங்களில் திருட்டுக்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 6

அராலிப் பகுதியில் ஆலயங்களிலும், வீடுகளிலும் புதன்கிழமை இரவு திருட்டுக்கள் நடைபெற்றுள்ளன. ஓடுகள் பிரித்து உட்புகுந்தவர்களே மின்சாரக் கருவிகளையும் உபகரணங்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

அராலி மத்தியிலுள்ள இரண்டு கோவில்களில் - புண்ணபுரம் சிவன் கோவில் மற்றும் முருகமூர்த்தி ஆலயங்களிலும் - இருந்த ஒலிப்பதிவுக்கருவிகள் அவற்றுக்கான உபகரணங்கள் திருப்பட்டுள்ளன. அவற்றின் ஒலிப்பதிவுக் கருவிகள் வானொலிகள், அம்பிளிபையர் என்பனவும் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதே இரவில் இரண்டு வீடுகளிலும் ஓடு பிரித்து உட்சென்ற திருடர்கள் நீர் இறைக்கும் மோட்டார்கள் மற்றும் மின்சாதனங்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுக்கள் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விசாரணைக்காக தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் மூவரை கைது செய்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன (அ-1)

## கஞ்சிகுடிச்சாறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரை இலக்கு வைத்து கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் அவர்களில் மூவர் உயிரிழந்தனர் என்றும் இருவர் காயமடைந்தனர் என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல் மேற்கொண்டனர் என்றும் கூறப்பட்டது.(சி)

## கிழக்குத் தேர்தலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரகாலச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது. இது தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கை.

யாழில் மேற்கொள்ளப்படும் பல்குழல் ஏவுகணை மற்றும் ஷெல்களின் தாக்குதல்களால் ஏற்படும் அதிர்ச்சியின் காரணமாக கர்ப்பிணித் தாய்மார் அந்த இடத்திலேயே குழந்தையைப் பிரசவித்த வரலாறும் உண்டு.

13 ஆவது திருத்தச்சட்டம் தமிழ் மக்களுக்கான நிலையான தீர்வு அல்ல என்பதைத் தமிழ் மக்கள் அப்போதே வெளிப்படையாகத் தெரிவித்து விட்டனர்.

ஆனால் அதில் உள்ள அதிகாரங்களைக் கூட அரசு தமிழ் மக்களுக்கு வழங்கத் தயாரில்லை.

ஜனாதிபதியின் அழுத்தம் காரணமாகவே திஸ்ஸ விதாரண 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்த சிபார்சு செய்தார்.

13ஆவது திருத்தச்சட்டம் மூலமாகவோ அல்லது ஒற்றை ஆட்சியின் ஊடாகவோ ஒருபோதும் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது.

### தமிழ் முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்தும் திட்டம்

தற்போது நடத்தப்படும் இந்தத் தேர்தலின் மூலமும் அரசு தமிழ் மக்களிடையேயும் முஸ்லிம் மக்களிடையேயும் பிளவை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

இதற்காக அரசு பிள்ளையான் குழுவுடன் ஒப்பந்தம் செய்து கிழக்கில் போட்டியிடுகிறது.

நாம் அங்கு போட்டியிடவில்லை என்பதால் அத் தேர்தலில் இலகுவாக வெல்லலாம் என்ற நப்பாசையில் அரசு அங்கு களமிறங்கியிருக்கின்றது.

தமிழ் மக்கள் இத் தேர்தலை ஏற்கமாட்டார்கள். இத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்ற கருத்தில் தமிழ் மக்கள் உள்ளனர்.

அரசின் இந்தச் சூழ்ச்சிக்கு ஒருபோதும் எமது மக்கள் இரையாக மாட்டார்கள். அரசு ஆள்பலம், பணபலம் ஆகியவற்றின் மூலம் அந்த மக்களை வாங்கிவிட முடியாது. தந்தை செல்வாவின் காலத்தில் இருந்தே தமிழ் மக்கள் சுயாட்சிக்காகப் போராடி வருகிறார்கள். அம்மக்களை நிர்ப்பந்தித்து அரசுக்கு ஆதரவாக வாக்குப் போட வைக்க அரசு முயற்சித்தால் அம் மக்கள் அரசுக்கு எதிராகவே வாக்களிப்பர்.

அம்மக்கள் ஒருபோதும் தமது இலட்சியக் கொள்கைகளை விட்டு அரசுக்கு பின்னாலும், அரசுடன் இணைந்து நிற்கின்ற ஆயுதக் குழுக்களுக்குப் பின்னாலும் போகமாட்டார்கள்.

காலம் மாறும். அது வரை தமது கொள்கையை விடாமல் மனத் தைரியத்துடன் இருக்குமாறு நாம் எமது மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் முற்றுமுழுதாகப் புறக்கணிக்க வேண்டும் என்று நாம் இந்தச் சபையில் வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றார் அவர். (உ)

## இலங்கை - இந்திய இராணுவத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றிந்தார் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிடமிருந்து மேலும் ஒத்துழைப்பை இலங்கை இராணுவத் தளபதி கோரியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே அரசியல் உறவு சரியான பாதையில் உள்ளது என்றும், பாதுகாப்புப் படையினர் தமக்கிடையேயான உறவுகளைப் பலப்படுத்த வேண்டிய தருணம் இது என்றும் இலங்கை இராணுவத் தளபதி இந்தச் சந்திப்பின் பின்னர் தெரிவித்திருக்கின்றார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தீவிர நடவடிக்கைக்காகத் தனது இராணுவத்தை நவீனமயப்படுத்த முனைந்திருக்கும் இலங்கைக்கு, புதுடில்லி பேரழிவை ஏற்படுத்தாத ஆயுதங்களையே வழங்கி வருகின்றது என்று கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் வலுவிடங்கள் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கு இலங்கை இராணுவத்திற்கு மேலும் விமானங்கள் தேவைப்படுகின்றன என்று செய்தி ஏஜென்ஸிகள் குறிப்பிடுகின்றன.

இந்தியா குறிப்பிட்ட வகை ஆயுதங்கள் சிலவற்றை வழங்க மறுத்ததைத் தொடர்ந்து 'ராடர்' கண்காணிப்பு சாதனங்கள் போன்றவற்றை சீனா மற்றும் பாகிஸ்தானிடமிருந்து பெறுவதற்கான முயற்சியை இலங்கை மேற்கொண்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, இலங்கையில் இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள சார்க் உச்சிமாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்துகொள்வார் என்ற எதிர்பார்ப்பு இலங்கைத் தரப்பிடம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## பெண் புலி மூவரின் சடலங்கள் மன்னாரில் மீட்பு

மன்னார்,மார்ச்.06

மன்னார்,அடம்பன் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற மோதலில் உயிரிழந்தவர்கள் எனக் கூறப்படும் மூன்று பெண் புலி உறுப்பினர்களின் சடலங்கள் நேற்றுமுன்தினம் மாலை படைத் தரப்பினரால் மன்னார், பொது வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டன.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் மன்னார், பொதுவைத்தியசாலைக்குச் சென்று சடலங்களைப் பார்வையிட்ட மன்னார் மாவட்ட நீதிவான் ரி.கே.பிரபாகரன், பிரேத பரிசோதனையின் பின்னர் சடலங்களைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (சி)

## அவசரகாலச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்பிரேரணைக்கு ஆதரவாக 102 வாக்குகளும் எதிராக 14 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அரசுடன் இணைந்து ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் வாக்களித்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிராக வாக்களித்தது.

வாக்களிப்பு நடைபெறும் சமயம் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## புத்தளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கில் ஆங்காங்கேயுள்ள இடங்களில் இவ்வாறு புகுந்து தலைமறைவாகியுள்ள புலிகள் அவ்வப்போது சிறுசிறு தாக்குதல்களை நடத்திக் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

## இன்று இரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பித்தால், அதை ஆராய்ந்து அனுமதி வழங்கப்படும்.

பல ஆலய நிர்வாகிகள் இதற்கான அனுமதியை ஏற்கனவே பெற்றுள்ளார்கள் என்றும் - பொலிஸாரிடம் அனுமதி பொறாது ஒலி பெருக்கியைப் பாவித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## வவுனியா கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினரும் கைது செய்யப்பட்டனர்.

இக்கொலை வழக்குத் தொடர்பான புலன்விசாரணைகள் நடைபெறுவதால் இவர்களை இராணுவப் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்க உத்தரவிடுமாறு இராணுவத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த உத்தரவு நீதிமன்றினால் வழங்கப்பட்டது. (சி)

## தனக்கு அடிபணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியும் புலிகளை அதிகாரத்துக்கு நியமிப்பதே இந்தியாவின் நோக்கம்.

இந்தியாவின் இந்த சூழ்ச்சிக்குத் தலையாட்டும் பொம்மையாக இருக்க எமது நாட்டில் இப்போது சிலர் தயாராகவேயுள்ளனர்.

தேசியப் பாதுகாப்பு என்பது பிரபாகரனுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை மாத்திரமல்ல. இவ்வாறான சர்வதேச சதிகளை முறியடிப்பதும் தான் என்பதை இலங்கை அரசு தெரிந்துகொள்ளவேண்டும் - என்றார். (உ)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

05.02.2008 அன்று இறைபதமடைந்த இளவாலைக் கன்னியர் மட மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் லண்டன் கிளையின் செயலாளர்

**திருமதி வ.யூடித் ராஜ்குமாரி**

அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் அவரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி/551717) **இளவாலை கன்னியர்மட மகா வித்தியாலய சமூகம்.**

## மரண அறிவித்தல்

**கந்தையா தெட்சணாமூர்த்தி** (ஓய்வுநிலை, தபால் திணைக்களம்)



கோலாலம்பூர், மலேசியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தொல்புரம் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கந்தையா தெட்ணாமூர்த்தி நேற்று (05.03.2008) புதன் கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களாகிய வேலாயுதர் அல்லது பண்டாரம் கந்தையா - தையல்முத்து தம்பதிகளின் மூத்த மகனும் அமரர்களாகிய கதிரேசு வேலுப்பிள்ளை- முத்தாச்சி தம்பதிகளின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் ஸ்ரீராம் அவர்களின் (பெறுப்பாளர்,லங்கா சிமெந்து Ltd, இணுவில், யாழ்ப்பாணம்) பாசமிகு தந்தையும் பத்மாவின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களாகிய பாலசுப்பிரமணியம், தனபாக்கியம், சண்முகநாதன் மற்றும் குணபாக்கியம், ரத்தினசபாபதி(முன்னாள் லிகிதர், MPCS, சங்கானை), கணேசன் (கனடா), வரதராஜா (முன்னாள் MPCS,சங்கானை), லட்சுமிகாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி, பரமானந்தர், தனபாலன், செல்வராணி மற்றும் தவமணிதேவி, சாரதா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராகவராம்(Baharin), சிவகுமார் ராசினி (ஜேர்மனி), ராஜாராம் (மாணவன், தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'சரோஜினி வாசா',*
*தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.* (C)

*தகவல்:*
தெ.ஸ்ரீராம்(மகன்)

## அறிவொளி NALLUR

CHE: Mr. அன்பு
PHYSLCAL
FRI - 4 pm
சிங்களம்
E.S.பிரதான
(Sinh. Trained, S.L.T.S-I)
Sat, Sun-5 pm
Wed, Thur-5pm

## Logic - மாதிரிப் பரீட்சை-2008

- பகுதி I,II அடங்களாக 8 பரீட்சைகள்
- வெளிமாணவரும் விண்ணப்பிக்கலாம்
- முடிவு திகதி - 14.03.2008
- அனுமதி அட்டை - 10.04.2008
- விக்னா, நாவலர், யூனிவேர்சல் நிறுவனங்களில் பரீட்சைகள் நடைபெறும்.

பரீட்சகர்: P.கமல்.

## ஏசியன் உள்நாட்டு, வெளிநாட்டுக்கான பொதிகள் சேவை

வெளிநாட்டுக்கான பொதிகள், ஆவணங்கள் 3 நாள்களுக்குள் உத்தரவாதத்துடன் அனுப்பிவைக்கப்படும்.
மற்றும் கொழும்பு - யாழ்., யாழ். - கொழும்பு பொதிகள் ஆவணங்கள் உடனுக்குடன் அனுப்பிவைக்கப்படும்.
உங்களுக்குத் தேவையான வீட்டுத் தளபாடங்கள், அலுவலகத் தளபாடங்கள், மெத்தை வகைகள் பெற்றுக்கொள்ளலாம்.

**Asian தளபாட நிலையம்**

133, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையத்துக்கு அருகில்) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு - 0715635028, 0773583879

(சி/551667)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.